Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வானியைஉள் நாடு.

மலர் 30 | ஹேவிளம்பி ஆனி 1957 ஜூன் | இதழ் 6

கையாடுதல்

ஆசிரியர்

ஒருவரிடம் ஒப்படைவித்த பொருளைக் கையாடுதல் எக்காலத்திலும் எந்நாட்டிலும் குற்றம் என்னப்படும். அதற்கு நாட்டுச் சட்டம் தண்டனை விதிக்கும். ஒப்படைவித்த பொருள் சொத்தாகவும் இருக்கலாம் பணமாகவும் இருக்கலாம். தன்னுடையது அல்லாததைத் தான் பயன் செய்துகொண்டால் அது குற்றம் ஆகும். மேலும் ஒரு நோக்கத்தைக் கருதிக் கொடுத்த பொருளை அந்நோக்கத்திற் கல்லாது வேறு நோக்கத்திற்குச் செலவழித்தாலும் அதுவும் குற்றமே. செலவழித்த நோக்கம் தனக்குப் பயன்படாவிட்டாலும் அதன் குற்றத்தன்மை போகாது. தண்டனை மட்டும் குறைவுபடும். ஒரு செயலுக்காகக் கொடுக்கப்படும் பொருளோ பணமோ அச்செலவில் குறைவாகப் பயன் படுத்தியிருப்பின் செலவாகாத பங்கு களவின் பால்படும். அதற்கும் தண்டனை உண்டு. இந்தவகையில் எந்த நாட்டிலும் சட்டத்தின் செயல்முறை நடத்தப்பெறும்.

இந்தக் குற்றமுறை இரண்டு வகைப்படும். தனி மனிதனிடம் கையாளுதல், பொதுச் சொத்தில் கையாடுதல் என இரண்டாகப் பிரிக்கலாம். இரண்டிலும் குற்றம் ஒரே தன்மையாக இருந்தாலும், அதன் தண்டனை ஏற்றத்தாழ்வாக இருக்கும். தனி மனிதனிடம் கையாடுதலைக் காட்டிலும் பொதுச் சொத்துக்களில் கையாடுதல் பெருந் தண்

டனைக்கு உட்படும். தனி மனிதனுக்கு ஏற்படும் கெடுதி பிறரைப் பாதிக்காது. பொதுச் சொத்தில் ஏற்படும் கெடுதி பொதுமக்களைப் பாதிக்கும். ஆகவே தண்டனையும் பெரிதாகும். இனி பொதுச் சொத்து என்றால் ஒரு சமூகம், அரசியல், சமய நிலையம் முதலிய பலவும் சேரும். இப்படிப் பட்ட பொதுச் சொத்துக்களில் வெகு எளிதில் கையாடல் நடக்கும். தனிமனிதன் தானே குற்றம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வான். பொதுச் சொத்துக்களில் அவ்விதமான பாதுகாப்பு இல்லை. ஆகவே அங்கே கணக்குகளை அடிக்கடி மேற்பார்வை பார்க்கவும் சோதிக்கவும் தக்க ஆட்களை நியமிப்பது வழக்கமாகிவிட்டது. சமூக சேவைகளில் பாதுகாப்பு குறைவாக இருக்கும். ஆற்று நீர் எனக் கருதி, களவு மிகுதியாக ஏற்படக்கூடும். அரசியலில் பாதுகாப்பு அதிகம் அப்படியிருந்தும் கையாடுதல் மிகுதியாகிக் கொண்டு வருகிறது. சமய நிலையங்களிலோ சொல்ல முடியாது. கையாடல்களுக்கு அளவில்லை. அண்மையிலே அரசியலில் காணும் குற்றங்கள் பெருகி வருகின்றன. மிகுந்த ஊதியம் பெறும் தலைவர்களும் கூட இந்தக் குற்றங்களைச் செய்து வருகிறார்கள். தண்டனைகளும் ஏற்படுகின்றன. சமய நிலையங்களில் பொதுவாகக் கோயில் நிர்வாகங்களில் குற்றங்கள் நிரம்பச் செய்யப்படுகின்றன. அவைகளுக்குத் தடுப்புக்கள் நிரம்ப வேண்டியிருக்கின்றன.

தனி மனிதர்களாயினும் அரசியல் ஆயினும், தடுப்பு முறைகளும் பாதுகாப்பும் தண்டனைகளும் நிரம்ப இருக்கின்றன என்றோம். சமய நிலையங்களில் அவைகள் குறைவு என்று எண்ணுகிறோம். சமய நிலையங்களில் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை எப்போதும் உண்டு. ஆகவே அங்கே கையாடுதல் ஏற்படுவதற்கு அதுவே பாதுகாப்பாக இருக்கும். ஆனாலும் நன்றாய் ஊன்றிக் காணுமிடத்து அங்கேயும் கையாடல்கள் பல நடந்திருக்கின்றன. இதற்கு வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன. இலக்கியங்களில் மட்டும் அல்ல, கல்வெட்டுக்களிலும் சான்றுகள் இருக்கின்றன. கடவுள் அன்பில் மிகச் சிறந்திருந்த சோழ பாண்டியர்கள் நாளிலும் கூட இவ்விதக் கையாடல்கள் நடந்து தண்டனைகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே தற்காலத்தில் சமய நிலையங்களில் கையாடல்கள் ஏற்படுவது வியப்பல்ல.

இலக்கியங்களில் காணும் கையாடல்கள் சிறிது வேறு பட்டவைகள். கடவுள் அன்பினால் உலக வழக்கை மீறின பெரியார்கள் தங்களுக்கு என்று பயன்படுத்திக் கொள்ளா மல் இறைவனுக்காகத் தாம் பெற்ற பணத்தைச் செலவழித் துத் தண்டனை அடைந்தும் பின்னால் மன்னிக்கப்பட்டும் தொழப்படுவதும் காண்கிறோம். இந்த வகையில் சேர்ந்தது மாணிக்கவாசகர் வரலாறு ஆகும். பாண்டியனுக்காகக் குதிரை வாங்கச் சென்று இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று உலகையே மறந்து இறைவனுக்கு ஆலயங்களை எழுப்பி நோக்கத்தை மாற்றினது அதன் உட்கிடையாகும். இங்கே பாண்டியன் தண்டிக்கின்றான். இறைவன் ஆட் கொண்டு நரிகுதிரை ஆக்குதல், வெள்ளம் பெருக்கச் செய் தல் முதலிய அற்புதச் செயல்களில் பாண்டியன் உண்மை அறிந்து விடுதலை செய்து வழிபடுகிறான். இது கடவுள் அன் பின்பால்பட்டது.

இவ்வரலாற்றைப் போலவே ஆந்திர நாட்டில் பத்திரா சலத்தில் நடந்த இராமதாசர் வரலாறும் அமைந்தது. தாசில் தாரராக இருந்து நவாபிற்காக வாங்கின வரிகளைப் பத்திரா சலம் இராமபிரான் கோயில் கட்டுவதற்காகச் செலவு செய் யப்பட்டது. அதனை அறிந்த நவாப் இராமதாசரைத் தண் டிக்கிறார். இராம லட்சுமணர் வந்து நவாபிடம் செலவான பணத்தைத் தருகின்றனர். நவாப் இராமதாசரின் பக்தியை மெச்சி விடுதலை செய்கின்றான். இதுவும் கடவுள் அன்பின் பால் பட்டது. இப்படிப்பட்ட வரலாறுகள் மிகக் குறைவு. திருமங்கையாழ்வார் கொள்ளையடித்தும் புத்த விக்கிரகங் களைக் களவாடி உருக்கியும் திருமாலுக்குத் திருப்பணிகள் செய்ததும் இந்த பக்தியின் பொருட்டாக எண்ணப்படு கின்றன. இந்த வகையில் குற்றங்கள் மன்னிக்கப்படு கின்றன.

இனி வரலாற்றுப் பகுதிகளில் கோயில் நிருவாகங் களில் கையாடல்கள் நடந்திருக்கின்றன என்றும் அவை களைப் பரிசோதித்துக் குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் என்றும் அவர்கள் விசா ரித்துத் தண்டனை தந்தார்கள் என்றும் கல்வெட்டுக்களின் சான்றுகள் கூறுகின்றன. கி. பி. 985–1014 வரை ஆண்ட முதல் இராசராசன் காலத்தில் சிவாலயத் திருப்பணிகள்

நிரம்ப நடந்தன என்று காண்கிறோம். அவ்வாறு கட்டப்பட்ட ஆலயங்களில் நிபந்தனைகள் ஏற்பட்டுப் பற்பல நில, பண, வரி தானங்கள் தரப்பட்டன. அவைகளை ஒழுங்கு பெற ஆலய அதிகாரிகள் நடத்தக் கடமைப்பட்டிருந்தார்கள். ஆனால் கடமை பிறழ்ந்து கையாடல்கள் நடைபெற்ற வகையில் மதுராந்தகன் கண்டராதித்தனார் என்ற ஒரு அரசிளங்குமர அதிகாரி நியமிக்கப்பட்டார். அன்னார் புகழ் பெற்ற சைவ அடியார் கண்டராதித்தனர் பேரனார் ஆவார். உத்தமசோழனின் மகனாரும் ஆவார். அன்னார் இறையன்பு பூண்டு கையாடல் குற்றங்களைக் கடிந்து ஆலய நிர்வாகங்களை ஒழுங்குபடுத்தினார்.

சோழப் பேரரசில் முதல் குலோத்துங்கன் வழிமரபில் வந்த பல மன்னர் மன்னர்கள் சமய நிலையங்களை மிக ஆர்வத்துடன் போற்றிவந்தனர் என்பது உலகம் அறிந்ததே. அன்னார்கள் தாம் சோழ நாட்டுப் பெருங் கோயில்களை மிகச் சிறந்த முறையில் எழுப்பினார்கள். இரண்டு நூற்றாண்டுகளில் கோயில்கள் பன்மடங்கு பெருகின. கணக்கற்ற தானங்கள் செய்யப்பட்டன. நிர்வாகப் பொறுப்பும் முன் ஏறிற்று. ஆகவே கையாடலும் ஏற்படுவது இயல்பு அல்லவா ? மூன்றாம் குலோத்துங்கன் (1178—1218) காலத்தில் கணக்கற்ற கோயில்களின் ஆட்சி பெருகவே கையாடலும் குறைக்க வழிகோலப்பட்டது. மழையின்மையினால் பஞ்சமும் அதனால் குழப்பமும் தோன்றிற்று. குகையிடி கலகம் என்ற பெயரில் மடங்களுள் மாச்சரியமும் கலகங்களும் தோன்றின. அதிகாரிகளுள் உடன்படிக்கை ஏற்பட்டும் அதனை மீறின செய்தியும் கலகம் நேரிட்டதும் காண்கிறோம். இந்த வகையில் கையாடலும் அதனை அடக்குதலும் ஏற்பட்டன.

மூன்றாம் குலோத்துங்கன் மகன் மூன்றாம் இராசராசன் (1216—1256) காலத்தில் சோழர் பேரரசு மிகவும் அழிவுற்றது. போர்களும் கலகங்களும் மிகுந்தன. அரசனால் அவைகளை அடக்கமுடியவில்லை. அவன் சிறந்த வீரனாக இருந்தும் பயனில்லை. குறுநில மன்னர்கள் கலகங்களை விளைவித்தனர். நாட்டில் இராசத்துரோகம், சிவத்துரோகம், நாட்டுத்துரோகம் இவைகள் தாண்டவம் ஆடின. கி. பி. 1224-ல் அப்படிப்பட்ட துரோகிகள் விசாரிக்கப்பட்டுத்

தண்டிக்கப்பட்டார்கள். அதன் காரணமாக அந்தத் துரோகிகளின் நிலங்களும் பறிமுதல் செய்யப்பட்டு ஏலத்தில் விடப்பட்டன. அவ்வாறு துரோகங்கள் மிகுந்த இடங்கள் சீர்காழி, வலிவலம், திருவெண்காடு, மாகாளம், சிவபுரம் முதலிய பாடல்பெற்ற தலங்கள். ஆகவே மக்களுக்குச் சமயஅன்பு குறைந்துவிட்டது என ஊகிக்கவேண்டும். அடுத்து ஆண்ட 3-ம் இராசேந்திரச் சோழன் (1246—79) காலத்தில்சோழப் பேரரசே அழிந்துவிட்டது. இது ஒரு வியப்பு அல்ல.

விஜயாலயச் சோழர் பரம்பரையில் மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டைக் கூறலாம். அதற்குக் கல்வெட்டுச் சான்றோடு கருண பரம்பரையும் உள்ளது. அந்த மரபில் மிகப் புகழ்பெற்று விளங்கிய இராஜேந்திரசோழன் என்ற கங்கை கொண்ட சோழன் வடநாட்டின்மீது படையெடுத்துக் கங்கை வரைக்கும் சென்று தான் செய்த 'கங்கா விஜய'த்தை நிலைநிறுத்தக் 'கங்கை கொண்ட சோழபுரம்' என்ற ஒரு நகரத்தையும் வானளாவிய திருக்கோயிலையும் எழுப்பியதையும் நாம் அறிவோம். அந்தப் பெரிய கோயிலில் கடவுள் மங்கலம் செய்தானவுடன் அவன் தன் அமைச்சனை அழைத்து அக்கோயில் கட்ட எத்தனை செலவு ஆகியிருக்கிறது என்று அறிய விரும்பினான். அக்கோயிலுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சனோ ஒழுங்கான முறையில் கணக்கு வைத்திருக்கவில்லை. ஆனால் அவன் கள்ளங் கபடில்லாத பேரன்பன். கோயிலினுடைய பெருமையைப் பற்றியும், அதில் பெறக்கூடிய சீரிய சிறப்பத்தைப் பற்றியுமே அவன் எண்ணினானன்றிச் செலவான கணக்குகளைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. அரசன் திடீரென்று கணக்கு கேட்டதும் அமைச்சன் மிகவும் கவலைகொண்டு மணிவாசகப் பெருமான் போன்று இறைவனிடம் தன் நிலைமையை முறையிட்டான். மறுநாள் மூத்த பிள்ளையார் ஒரு கணக்கன் திருவுருவில் வந்து இசாசேந்திர சோழன் முன்னிலையில் கணக்கு ஏடுகளைக் கொண்டுவந்து வைத்தான். அரசனோ ஏடுகளைக் கண்டதும் அவைகளை முறையே வாசிக்கச் சொன்னான். கணக்குப் பிள்ளை ஏட்டைத் திறந்து " எத்து நூல் எண்பது லட்சம் " என்று படித்துவிட்டு அரசனுடைய முகத்தைப் பார்த்தான். அரசனுக்கு அது முதலில்

விளங்கவில்லை. சிறிது நேரம் சிந்தித்தான். பிறகு, போதும் நீ ஏடுகளை எடுத்துக்கொண்டு போகலாம்" என்று சொன்ஞன். இது என்ன வியப்பு! அரசன் இந்த ஒரு குறிப்பினுல் எவ்வாறு ஆறுதல் அடைந்தான்? இதைப்பற்றி ஒரு கர்ண பரம்பரை விளக்கம் உண்டு.

நமது நாட்டில் திருமணமோ அல்லது வேறு நற் செயலோ செய்யும்போது அதற்காகக் கணக்கும் எழுது வது உண்டு. அப்போது பிள்ளையார் சுழி இட்டதுடன் 'மஞ்சள் குங்குமம் ஒரு அணு' என்று எழுதுவது உண்டு. இதைப்போல கோயில் கட்டும்போது முதலில் "எத்து நூல்" என்ற கணக்கு எழுதுவது உண்டு. அதாவது 'கருங் கல் பணிக்கு எத்தனை நூல் அளவு பிடித்தது' என்பதைக் குறிப்பதாகும். கருங்கல்லைச் செதுக்குவதற்கு முந்தி அது அளக்க நூல் அளவு எழுதுவது வழக்கம். கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலுக்கு அப்படிப்பட்ட நூல் எண்பது லட்சம் பிடித்தது என்ற கணக்கைக் கேட்டதே அதனைப் பற்றிய கணக்கு முழுவதும் கேட்கவேண்டிய தேவை இல்லை என்று அரசன் எண்ணிவிட்டான். அதனுலேயே, அவன் வேறு பரிசோதனை செய்யவில்லை

தற்போதும் இந்த வகையில் கணக்கைப் படித்த விநாயகருக்கு சிறிது தூரத்தில் ஒரு கோயில் ஏற்பட்டுள் ளது. அந்தக் கோயில் பிள்ளையாருக்கு "கணக்க விநாய கர்" என்ற பெயர் தற்போதும் வழங்குகிறது.

இந்த வரலாற்றினுல் நாம் அறியக்கூடியது என்ன வெனில் தற்காலத்தைப் போலவே சோழர்கள் காலத்திலும் கோயில் முதலிய திருப்பணிகளிலும்கூடக் கணக்கு வைத்துக் கொண்டு பரிசோதனையும் நடந்தது என்று அறியலாம். சில சமயங்களில் அதிகாரிகள் கையாடல் செய்வதும் உண்டு. அதைக் கண்டித்தும், தண்டித்தும் ஒழுக்கமுறை தேடிஞர் கள். இங்கே குறித்த செய்தி வெறும் கற்பனைக் கதை என்று தள்ளிவிடலாகாது. கங்கைகொண்ட சோழபுரத்துப் பெரியாவுடையார் கோயிலில் கீழைக்கோபுர வாசலுக்குத் தென்புறம் ஒரு கற்றூணிலே "எத்து நூல் எண்பது லட்சம்" என்று பொறிக்கப்பட்டுள்ளதைத் தென் இந்தியக் கோயில் சாசனங்கள்—இரண்டாவது பகுதி எடுத்துக் கூறுகின்றது.

ஆகவே, தற்காலங்களில் நமது திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளோ அல்லது திருவிழாக்களோ ஒழுங்காக நடைபெறும் பொருட்டு அரசியலார் அதிகாரிகளை நியமிப்பது குறை என்று எண்ணக்கூடாது. உலகில் சமய அன்பில் மிகச் சிறந்த சோழ அரசர்கள் காலத்திலேயே கையாடல் நிகழ்ந்திருக்கும்போது கடவுள் அன்பு குறைந்து வரும் இந்நாளில் அதனைத் தவிர்க்க ஏற்படுத்தும் விதிகள் மிகத் தேவை என்று அறியலாம்.

மற்ற சமய நிலையங்களிலும், சிறப்பாக உண்மையே தங்களுக்கு உரிமை என்று கூறிக்கொள்ளும் சில சமயத்தார்களிலும் இக்காலங்களில் கையாடல்கள் அடிக்கடி நடந்து வருகின்றன. ஆகவே, நமது ஆலயங்களில் தூய்மை, அன்பு முதலியவைகள் ஓங்கவேண்டும் என்று எண்ணும் போது கையாடல் என்ற சொல்லையே நமது அகராதியிலிருந்து தொலைக்க வேண்டியது நமது கடமை யல்லவா ?

திருமுருகாற்றுப்படை சைவசித்தாந்த விளக்கமே

வித்துவான் - செ. வேங்கடராமச் செட்டியார்

(மலர்-30 ; இதழ் - 5 ; 160-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பெருமானுடைய அறுமுகங்களுக்குமேல் ஆறு மணி முடிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு முடியும், தாமம், முகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்ற ஐந்துறுப்புக்களை யுடையதாகக் காணப்படுகின்றது. அம்முடிகளில் பதிக்கப்பெற்ற, ஒன்றோடொன்று ஒவ்வாத பலநிற மணிகள், மின்னலைப் போன்ற ஒளியுடன் சென்னியில் பொலிந்து தோன்றுகின்றன. ஒவ்வொரு முகத்தினும் இருபுறத்தும் அமைந்த காதுகளில் ஒளியுடன் அசைகின்ற வேலைப்பாடு அமைந்த பொன்னாலியன்ற மகரகுண்டலங்கள் காணப்படுகின்றன. ஒளிவாய்ந்த முருகப் பெருமான் முகங்களின் இருமருங்கும் அக்குண்டலங்கள் தொங்கியசையும் தோற்றம், விண்ணின் விளங்கும் வெண்டிங்களை யகலாது சூழ்ந்துள்ள விண்மீன்களைப்போல ஒளிசெய்கின்றன.

குற்றமில்லாத கொள்கையுடையராய்த் தவமாகிய தந் தொழிலைச் செய்து முடிப்பவருடைய நெஞ்சிலே இந்த ஆறுமுகங்களும் பொருந்தித் தோன்றும் இயல்பையுடையனவாம்.

அவற்றுள் ஒருமுகம், மிக்க இருளையுடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும்படிப் பல கிரணங்களையும் தோற்றுவித்தது. அம்முகத்திற் கேற்ற கையிரண்டில் ஒருகை, ஞாயிற்றின் வெம்மை உயிர்களை வருத்தாதபடி தாங்கி விண்ணில் திரிகின்ற வேணுவிகட்குப் பாதுகாவலாக ஏந்திய நிலையிலுள்ளது. மற்றொருகை மருங்கில் வைக்கப் பட்டுள்ளது.

இரண்டாவது முகம், தன்பால் அன்பு செய்பவர்கள் துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க்கு இனிமையாக நடந்து அவர் மேற்சென்ற அன்பினால் மகிழ்ந்து அவர் வேண்டும் வரங்களைக் கொடுக்கும் இயல்பினது. அம்முகத் திற்கேற்ற கையிரண்டில் ஒருகை, அங்குசத்தைக்கொண்டு யானையைச் செலுத்துகின்றது. மற்றொருகை, செந்நிற ஆடையணிந்த துடையின்மேல் கிடக்கின்றது. தன்னை அன்பால் நினைவார்பால் அவர் நினைந்தவுடன் யானைமேல் விரைந்து செல்லுதல் இயல்பாதலின் வரங்கொடுக்கும் முகத்திற்குரிய கை அங்குசம் தாங்கியுள்ளது.

மூன்றாவது முகம், மந்திரத்தையுடைய வேத விதிவழு வாத அந்தணர் செய்யும் வேள்வியில் தீங்கு நிகழாதபடி நினைக்கும் இயல்பினது. அம்முகத்திற்குரிய கையிரண்டும் வேலும் கேடகமும் ஏந்தி அசுரர் வந்து வேள்வியைக்கெடுக் காமல் காப்பாற்றவேண்டி வலமாகச் சுழற்றுகின்றன.

நான்காவது முகம், இவ்வுலகத்து வழங்காத வேதங் களிலும் நூல்களிலுமுள்ள பொருள்களை முனிவர்கள் ஏம முறும்படி ஆராய்ந்து சந்திரனைப் போலத் திக்குகளை யெல் லாம் விளக்கும் இயல்பினது. அம்முகத்திற்குரிய இருகை களில் ஒருகை, முனிவர்க்குத் தத்துவங் கடந்த பொருளைச் சொல்லாமல் சொல்லுதற்கு ஞானமுத்திரையைக் காட்டிய வண்ணம் மார்பொடு விளங்குகின்றது. மற்றொருகை, தாழ்ந்துள்ள மார்பின் மாலையோடு சேர்ந்து அழகுற விளங்குகின்றது. இறைவன், மோனமாய் ஞான முத்தி ரையைக் காட்டியவண்ணம் தானேயாக இருந்து பரம்

பொருளிது வென்று காட்டித்தர மாணுக்கர்கட்கு ஆனந்த மயமான ஒளி தானே நிறையும்.

ஐந்தாவது முகம், சென்ற போரில் வெகுண்டு வந்த பகைவர்களைத் தேய்த்து அழித்துக் கறுவுதல் கொண்ட மனத்தோடு களவேள்வி செய்தது. அம்முகத்திற்கேற்ற கையிரண்டில் ஒருகை கீழ்வீழ்கின்ற வீரவளையோடு மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரை கொடுக்கும் இயல்பி னது. மற்றொருகை, மணியை அசைத்து ஒலிக்கப் பண்ணு மியல்பினது.

ஆறுவது முகம், குறவருடைய இளமையுடைய மக ளாகிய கொடியைப் போலும் இடையுடைய மடப்பம் பொருந்திய வள்ளியம்மையாரோடு நகைத்தலை விரும்பும் இயல்பினது. காமநுகர்ச்சியில்லாத கடவுள், உலகில் இல் வாழ்க்கை நிகழ்தற்காகவே இவ்வாறு நகை செய்கின்றான் என்க. அம்முகத்திற்கேற்ற கையிரண்டில் ஒருகை, நீல நிறத்தையுடைய மேகத்தாலே மிக்க மழையைப் பெய்கின் றது. மற்றொருகை, தேவ உலகத்து வாழ்கின்ற தேவ மங்கையர்க்கு மணமாலையைச் சூட்டுகின்றது. உலகில் நிகழ்த்தப்படும் இல்வாழ்க்கை இனிது நடத்தற்கு மழையும் மணமும் இன்றியமையாமையின் இவைகளை அக்கையிரண் டும் செய்கின்றன. முத்துமாலை தொங்கும் அழகிய மார் பிலே கிடக்கின்ற மூன்று வரிகள் அழகின் உயர்வைக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறு அவ்வாறு முகங்களும் செய்யவேண்டிய முறைகளைப் பழகி நடத்துகின்றன. அவற்றிற் கேற்பப் பன்னிரண்டு கைகளும் உரிய தொழில்களைச் செய்கின்றன. விண்ணில் தேவ துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கு கின்றன. ஊது கொம்புகள் ஒலிக்கின்றன. சங்குகள் முழங்குகின்றன. இடிபோன்று முரசுகள் முழங்குகின் றன. பல புள்ளிகளையுடைய மயில் முருகன் ஆணையால் வெற்றிக்கொடியிலிருந்து அகவுகின்றது. இவை இங்ஙனம் நிகழ விண்வழியாக விரைந்து செல்லுதலை மேற்கொண்டு நன்மக்களால் புகழப்பட்ட சிறந்த புகழினையுடைய திருச் சீரலைவாய் என்னும் பதியில் செல்ல எழுந்தருளுதலும் அம் முருகப் பெருமானுக்கு நிலைபெற்ற குணமாகும் (என்பது அதன்விரிவு.)

இப்பகுதி இறைவன் உலகமாய் விளங்கும் தன்மையை எவ்வாறு விளக்குகின்றது என்பதை நோக்குவோம். உருவமுடைய ஒருபொருள், நாற்றிசையும் மேலும் கீழும் ஆகிய இரண்டு பக்கமும் ஆக ஆறு பக்கங்களை யுடையதாதல் கண்கூடு. உலகம் வடிவமுடையது. அதற்கு மேற்கூறிய ஆறுபக்கங்கள் உண்டு. உலக முழுதும் நோக்கவேண்டுமாயின் இந்த ஆறு பக்கங்களையும் பார்க்க வேண்டும். உலகமாகவும் உலகத்தின் ஆறுபக்கங்களாகவும் இருப்பவன் யானே என்பது தோன்றவே இறைவன் ஆறுமுகமுடையனாக விளங்குகின்றான் என்பது ஆன்றோர் முடிபு. இம்முறையால் முருகப் பெருமான் ஐம்பூதங்களாலாய உலகமாய் விளங்குகின்றான் என்பது பெறப்படும்.

மேலும், அறுமுகமும் பன்னிருகையும் செய்யும் செயல்கள் யாவும் உலக நிகழ்ச்சி நன்கு நடைபெறச் செய்வனவாகவே விளங்குவதால் முருகன் கலப்பால் உலகமாய் விளங்குகின்றான் என்பது விளங்கும். பலகதிர் விரிந்தன்று ஒருமுகம் என்பதால் ஞாயிறாக ஒளி செய்கின்றான் என்பதும், திங்கள் போலத் திசைவிளக்கும்'' என உவமைமுகத்தான் விளக்கி யிருத்தலால் அத்திங்களின் தன்மையனாக இருக்கின்றான் என்பதும் பெறப்படும். திங்களுக்குரிய ஒளி, ஞாயிற்றின் பால் பெற்றதே ஆதலின் ஞாயிறாக அவன் விளங்குகின்றான் என்றமையால் திங்களாகவும் இருக்கின்றான் என்பதைப் பெறவைத்தார் என்றலும் ஒன்று. எனவே முருகப்பெருமான் திங்களும் ஞாயிறுமாக இருக்கின்றான் என்பது பெறப்படும்.

இனி, உயிர்கள், இவ்வுலகத்து நுகர்தற்கு வேண்டியவற்றை வேண்டியாங்குப் பெற விரும்புவனவும் மறுமைக்கண் தேவராதற்பொருட்டு வேள்வி முதலியவற்றைச் செய்ய விரும்புவனவும் இந்த இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் பெற விரும்பினது ஞானம் ஒன்றையே நோக்குவனவும் என முத்திறத்தவாகக் கொள்ளலாம். இம்முத்திற உயிர்கட்கும் முருகன், வரங்கொடுக்கும் முகத்தானும் நகையமர்ந்த முகத்தானும் களம்வேட்ட முகத்தானும் வேண்டிய பொருள்களை யளித்தும் இன்புறுத்தியும் இம்மைப் பயனை அளிக்கின்றான். வேள்வியோர்க்கும் முகத்தால் மறுமைப் பயனை அளிக்கின்றான். திங்கள் போலத்

திசைவிளக்கும் முகத்தால் ஞானத்தை யளிக்கின்றான்; வீடுபேற்றின் பொருட்டு, உயிர்கள் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் வீட்டின்பத்தையும் எய்தும்பொருட்டு முருகப் பெருமான் நகையமர்தல் முதலிய செய்து இன்ப முதலியவற்றை யுறுகின்றான் என்பது இங்குப் பெறப்படு கின்றது. படவே, முருகன் கலப்பால் உயிர்கள் ஆகின் றான் என்பது போதரும். இதனால் ஐம்பூதங்களானியன்ற உலகமாகவும் திங்களாகவும் ஞாயிறாகவும் இயமானனாகவும் விளங்கி, முருகப்பெருமான் உலகமே யாகின்றான் என்பது தெளிவாம். பரங்குன்றத்தை நோக்கத் திருச்சீரலைவாய் தாழ்ந்த இடத்தின்கண் இருத்தலும் பரங்குன்றத்தில் தத்து வங் கடந்து ஞானேயாய் நிற்கும் இறைவன், தன் சிறப் பியல்பிலிருந்து இறங்கி உலகமாய் நிற்கும் பொதுவியல் பிற்கு வந்ததாகக் கூறுதலும் எத்துணைப் பொருத்தமாகக் காணப்படுகின்றது காண்மின்.

திருச்சீரலைவாய் என்றது திருச்செந்தூரை. முருகன் திருக்கோயில் கடல் அலைகள் மோதும் இடத்தில் அமைந் திருத்தலின் இப்பெயர் வந்தது. "வெண்டலைப் புணரி அலைக் கும் செந்தில் நெடுவேள் நிலைஇய காமர் வியன் றுறை" எனப் புறப்பாட்டு இப்பெயர்க் காரணத்தை விளக்குதல் காண்க.

10. திருவாவிநன்குடி

இப்பகுதியில் முருகப்பெருமான் உயிர்க்குயிராதல் தன்மையால் உலகமோடுடனாய் நிற்கும் உடனிலையை யுணர்த்துகின்றார் புலவர். திருமால் முதலிய தேவர்கள் பிரமன் பொருட்டு வந்து தன்னைக் காண வள்ளியம்மையா ரோடு ஆவிநன்குடியில் உறைதலும் உரியன் முருகன் என்பது இங்குக் கூறப்படும் பொருள்.

முருகப்பெருமான் கயிலையில் வீற்றிருக்கும்பொழுது பிரமன் சிவதரிசனத்திற்கு வந்தானாக, அப்பொழுது தன்னை நன்கு மதியாது அவன் செல்ல அவன் செருக்கடக்க வேண்டி முருகப் பெருமான், அவனை அருகழைத்துப் பிர ணவப் பொருள் கேட்க அது கூற வியலாது பிரமன் திகைப்ப அவன் தலையில் குட்டிச் சிறையிட்டான். அவ னைச் சிறை மீட்பதற்காகவே திருமால் முதலிய தேவர்கள்

முருகப் பெருமானை வணங்கிவேண்டிக்கொள்ளத் திருவாவி நன்குடிக்குச் செல்கின்றார்கள். (நச்சினார்க்கினியர் வேறு கதை கூறுவர்) தேவர்கட்கு முன்னாக முனிவர் புகுகின்றனர். அமைதியான தோற்றமுடைய இம்முனிவர்களைக் கண்டால் முருகன் மறுது ஏற்றுக்கொள்வானன்றோ? இம் முனிவரைக் கண்ட அமைதித் தன்மையால் பின்வருபவர்களையும் மறுக்காமல் ஏற்றுக்கொள்வான் என்னும் கருத்தால் இவர்கள் முன்னே புகுகின்றார்கள். இம்முனிவர் இயல்பைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல் அழகாகக் காட்டுகின்றார் புலவர்.

முனிவர்: மரவுரியை உடையாக உடுத்துள்ளனர். வடிவாலும் நிறத்ாலும் வலம்புரிச் சங்கினையொத்த நரை முடி யுடையவராக விளங்குகின்றனர். எக்காலத்தும் நீராடுதலால் அழுக்கில்லாமல் விளங்குகின்றது அவர்களுடம்பு. அவர்கள் மார்பு மான்தோலால் போர்க்கப்பட்டுளது. விரதங்களால் தசை சுருங்கியிருப்பதால் அம்மார்பில் எலும்புகள் எழுந்து கோவையாகத் தோன்றி அசைகின்றன. நல்ல நாள்கள் பலவற்றுள் உணவின்றிக் கழித்த நோன்பினையுடையவர்கள். அவர்கள் மனத்தில் மாறுபாடுமில்லை; செற்றமுமில்லை. அவர்கள் இயற்கையறிவு, எல்லாவற்றையும் கற்றவராலும் அறியவியலாத பெருமையது. கற்றவர்க்கெல்லாம் தாம் எல்லையாக நிற்கும் தலைமையுடையவர்கள். அவ்வறிவின் திறத்தால் காமத்தையும் கடுஞ்சினத்தையும் அறவே நீக்கினவர்கள். தவத்தின் கடுமையால் மெய்வருத்தம் காணப்படினும் மனத்தினால் வருத்தம் சிறிதும் அறியப்படாத இயல்பினர். யாரிடத்தும் வெறுப்பில்லாத நல்லறிவினையுடையவர்கள். இத்தகைய முனிவர்கள் முருகன்பால் முன்னே புகுகின்றனர்.

நீர் பலகால் மூழ்குதலால் அழுக்கடையாப் புறத்தூய்மையும் காமவெகுளி மயக்கமாகிய முக்குற்றமும் முறையினீங்கிய அகத்தூய்மையும் உடைய முனிவர் குழாத்தைக் கண்டால் முருகப்பெருமான் பிரமன்பால் கொண்ட செற்றங் குறைவது இயல்பன்றோ? இம்முனிவர் குழாத்தைக் கண்ட பின்னரும் வெகுளி சிறிது உளதாயின் அதையும் தணிக்கும் பொருட்டு இன்னும் ஒரு குழாம் வருகின்றது. அது கந்தருவர் குழாம்; ஆணும் பெண்ணும் கலந்த குழாம்

அது. அக்குழாத்தில் உள்ளவர்கள் எத்தகையினர் என்பதை நோக்குவோம்.

கந்தருவர் : கந்தருவர்கள், புகையை முகந்துகொண்டாற் போன்ற அழுக்கில்லாத் தூய மெல்லிய உடையணிந்துள்ளார்கள். அவர்கள் மார்பில் அரும்பு சிறிதலர்ந்த மலர் மாலை கிடந்து அசைகின்றது. செவியாலே சுருதியை அளந்து கட்டின சுற்றுதல் பொருந்திய வார்க்கட்டினையுடைய நல்ல யாழிசையிலே பயின்ற அன்புடைய நெஞ்சினாலே எக்காலத்தும் மெல்லிய மொழிகளையே சொல்லுதலில் விருப்பமுள்ளவர்கள். இத்தகையவர்கள் இனிய யாழ் வாசிக்கின்றார்கள். இவர்கள் ஆடவர்கள். இவர்களோடு பெண்டிரும் வருகின்றனர். அவர்கள், மக்களுக்கு வரும் நோயே இல்லாமல் இயன்றுள்ள உடம்பையுடையவர்கள். அவர்கள் மேனி மாந்தளிர் போன்று விளங்குகின்றது. அந்த மேனியில் தேமல் ஒளி வீசுகின்றது. அது ஒளி வீசுந்தோறும் பொன்னைத் தேய்த்தாற்போல் விளங்குகின்றது. அவர்கள் இடைகளில் பருமம் என்னும் மணிஅணியை அணிந்துள்ளார்கள். அது கண்ணுக்கினிய ஒளியுடைய தாய்ப் பதினெண் கோவையுடையதாகக் காணப்படுகின்றது. இத்தகைய குற்றமற்ற அவ்வாடவர் அருகே பாடிக்கொண்டு வருகின்றார்கள்.

முன்வந்த முனிவர் குழாத்தில் துறவு நிலையைப் பார்க்கின்றோம். இக் கந்தருவர் குழாத்தில் இல்லறநிலையைப் பார்க்கின்றோம். முனிவர் யாவரும் ஆடவர்களே. கந்தருவர் குழாத்தில் மைந்தரும் மகளிரும் கலந்து காட்சியளிக்கின்றனர். முனிவர் குழாத்தில் நரை முடியும் ஒட்டிய வயிறும் எலும்பு தோன்றும் மார்பும் காணப்படுகின்றன. கந்தருவர் குழாத்தில் மாந்தளிர் போன்ற மேனியையும் பொன்போன்ற தேமலையும் நோயின்றியன்ற நல்லுடம்பையும் காண்கின்றோம். முனிவர் உடுத்திருப்பது மரவுரி; கந்தருவர் உடையோ புகை முகந்தாற்போன்ற தூய மெல்லிய அழகிய ஆடையாகும். முனிவர் குழாத்தில் அமைதி நிலவுகின்றது; கந்தருவர் குழாத்தில் யாழொலியும் இன்குரற்பாடலும் இனிதாக எழுகின்றன. இக்குழாத்தில் உடம்பின் தோற்றத்தாலும் மொழிவழித்தோன்றும் இன்னிசையாலும் கண்ணுக்கும் செவிக்கும் நுகர்ச்சியுண்டு.

ஆனல் முனிவர் குழாத்திலோ கண்ணுக்கினிய காட்சியுமில்லை ; காதுக்கினிய கேள்வியுமில்லை. அவர் புறத் தோற்றம் விரும்பிக் காணத்தக்க கவினுடையதாகவில்லை. அம்முனிவர் அகத்தோற்றமோ மிகமிகச் சிறந்து விளங்குகின்றது ! கந்தருவர் குழாத்தின் அகத் தோற்றத்தைப் பற்றி யாதும் உணரவியலவில்லை ; உடம்பின் புறத் தோற்றமும் மென்மொழியுமே காணவும் கேட்கவும் இயலுகின்றது. முனிவர் குழாத்திலுள்ள உள்ளொளி, உணர்ந்தோர் உள்ளங்களில் இருளைப் போக்கி ஒளியுண்டாக்கும் தன்மையதாகக் காணப்படுகின்றது. மெய்யும் மொழியும் மனத்தின் வழியவே ஆதலின் மெய்யழகைவிட மொழி இனிமையைவிட மனத்தழகே சிறந்தது என்பது கூறவும் வேண்டுமோ? அம்முனிவர் உள்ளத்தில் காமவெகுளி மயக்கங்கட்குஇடமேயில்லை. நூலறிவாகிய அபரஞானத்தாலும் அநுபவவுணர்வாகிய பரஞானத்தாலும் அவர்கள் உள்ளம் ஒளிமயமாய்த் திகழ்கின்றது. ஓவியராலும் வரைந்துகாட்டவியலாதமுனிவர் உள்ளொளியை நன்கு விளக்கிக் காட்டுகின்முர் புலவர்.

தேவர் : முனிவர்கள் உள்ளொளியால் அமைதியையுண்டாக்கிக் கொண்டு முன் புகுந்ததாலும், கந்தருவர் இன்னிசையால் அமைதியை யுண்டாக்கிக் கொண்டு பின் புகுந்ததாலும், முருகப் பெருமான் நல்ல செவ்வியனுகை இருப்பான் என்று துணிந்து மாமனுகிய திருமால் வருகின்முன். மாமனைக் கண்டால் மருகனுகிய முருகனுக்கு அன்பே மிகுதல் இயல்பன்றே ? மேலும் பிரமன், தன்மகனுதலின் அவன் துயர் நீக்கும் உரிமையும் விரைவும் தோன்ற முன்னர் வருகின்முன் திருமால். யாவரும் அஞ்சத்தக்க நஞ்சுடைய பாம்பு வலி அழியும்படி அழிக்கின்ற கருடக் கொடியை யுடையவனுய் அத்திருமால் புகுகின்முன் ; சேய்மையில் வரும்பொழுதே கொடியைக் கொண்டு தன் வருகையை யுணரவேண்டி அவற்றுக்குப் பின் வெள்ளேற்றுக் கொடி தோன்றுகின்றது. அக்கொடி, மங்கை பங்கனுகிய முக்கண்ணனுடையது. அக்கொடியுடன் திரிபுரமெரிசெய்த விரிசடைக் கடவுள் தோன்றுகின்முன். “ தாய் தந்தையை மதித்து அவர் விரும்பியதைச் செய்வது மகன் கடமை ” என்பதை யுணர்ந்து முருகன் பிரமனைச் சிறைவிடுப்பான் என்று அம்மங்கை பங்கன் வருதல் முறைதானே !

அவற்குப்பின் ஐராவதம் என்னும் யானைமேல் கண்ணாயிரங்கொண்ட விண்ணுடர் கோமான் வருகின்றான். அவன் நூறு பரி வேள்விகளைச் செய்தவன்; பகைவர்களை வென்று கொண்ட வெற்றியை யுடையவன். அவனேறிய யானை நான்கு கொம்புகளையுடையது; அழகிய நடையது. நிலத்தே தாழ்ந்த பெரிய துதிக்கையை யுடையது. முருகனுக்குத் தெய்வயானையை யீன்றளித்து மாமன் என்னும் உரிமைபெற்ற இந்திரன் அவ்யானைமேல் பெருமையும் உரிமையும் தோன்ற வருதல் பொருத்தமேயன்றோ?

நல்ல நகரங்கள் நிலைபெற்ற உலகத்தைக் காக்கும் ஒரு நோக்கத்தையே விரும்பி மேற்கொண்டுள்ள அரன், அரி, அயன், இந்திரன் ஆகிய நான்கு பெருந் தெய்வங்களுள் தாமரையில் பிறந்தவனும் அழிவில்லாத ஆயுளையுடையவனும் ஆய நான்முகனாகிய ஒருவனைச் சிறையினின்றும் விடுதலை செய்யவேண்டிப் பலராலும் புகழப்படுகின்ற மேற்சொன்ன ஏனை மூவரும் தேவர் குழாத்திற்குத் தலைவர்களாக வரப் பகல்போல் விளங்கும் மாறுபடாத நல்லறிவினை யுடைய வசுக்கள், மருத்துவர், ஆதித்தர், உருத்திரர் என்னும் உயர்நிலைபெற்ற முப்பத்து மூவரோடும் பதினெண் வகைப்பட்ட தேவகணங்கள், விண்மீன்கள் பூத்தாற் போன்ற தோற்றமுடையராயும், அம்மீன்களைச் சேர்ந்து காற்று எழுந்தாற்போன்ற விரைந்த நடையினை யுடையராயும், காற்றுக்கிடையில் தீயெழுந்தாற்போன்ற வலிமை யுடையவர்களாயும், தீயுண்டாகுமாறு இடியிடித்தாற் போன்ற குரலினையுடையவர்களாயும், தாம் அடைந்துள்ள குறை தீர்க்கப்படவேண்டிய முறையிலே விண்வழியாக இன்பமிக்க மண்ணுலகிலே வந்து தோன்றி ஒருசேரக் காண்கின்றார்கள். முருகப்பெருமான் இவ்வாறு அத்தேவர்கள் வந்து காணுமாறு வருத்தமில்லாத அருட்கற்பினை யுடைய வள்ளியுடன் சிலநாள் ஆவிநன்குடியென்னும் ஊரில் இருத்தலுமுரியன்.

முன்னே முனிவர் குழாம் செல்லப் பின்னர்க் கந்தருவர் குழாம் செல்ல, அவர்க்குப் பின்னே அரி, அரன், இந்திரன் என்ற மூவரைத் தலைவராகக் கொண்ட தேவகணம் புகுந்து முருகன்பால் தங்குறையைத் தெரிவிக்கச் சென்று காண்கின்றது. இங்ஙனம் தேவர்கள் தரிசிக்க வள்ளி

யம்மையாரோடு முருகன், ஆவிநன்குடியில் சிலநாள் தங்கி யிருப்பான் என்று புலவர் கூறுகின்றார்.

திருச்சீரலைவாயில் அறுமுகமுடைய முருகன் திருவுரு வத்தைக் கூறினாரன்றித் தேவியாரைக் கூறவில்லை. ஆவிநன் குடியில் அம்முருகன் தேவியொடு வீற்றிருக்கும் நிலையை விளம்புகின்றார். இந்நிலையே இறைவன், உயிர்க்குயிராதல் தன்மையால், உலகமோடுடனாதலாகிய நிலையாகும். "சர்வம் சத்திமயம் சகத்து" என்பது வேதவாக்கியம். இதனை, " அனைத்தும் தன்மயமெனும் சுருதி கரியாவைத்தும் " என் னும் (முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்-12) ஓதாதுணர்ந்த குமரகுருபரருடைய திருவாக்கானுணரலாம். உலகமாய் விளங்கும் சக்திக்கு உயிராய் அச்சத்தியுடன் வீற்றிருப்பதே உயிர்க்குயிராய் நிற்கும் உடனாதல் தன்மையை நன்கு விளக்குதல் காண்க.

மேலும், உயிர்கள்தம் மலநோய் நீங்க இறைவன் திருக் கூத்தைக் காணவேண்டியிருக்க அவ்வுயிர்களின் சார்பா கச் சத்தியே அக்கூத்தைக் காண்கின்றாள் என்பதை :

" பாலுண் குழவிப் பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூல் கொண்ட வையரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும் "

(சிதம்பர மும்மணிக்கோவை-1)

என்று குமரகுருபரர் கூறியிருத்தல் காண்க. இதனால் சத்தியே உயிர்கட்குப் பிரதிநிதியாதல் விளங்கும். உல குயிர்க்கெல்லாம் முருகன் உயிராயிருத்தலை அவ்வுயிர்கட் குப் பிரதிநிதியாக விளங்கும் சத்தியின் உயிர்க்குயிராய் உடனிருந்து காட்டுவதே சாலப் பொருத்தமாதல் காண்க. அச்சத்தி தானும் மண்ணுலக மாதாகிய வள்ளியம்மையா ராதல் எவ்வளவு பொருத்தம் என்பதை அறிக. இங்ஙன மன்றி உடனாதல் தன்மையை விளக்க ஒண்ணுமையை நுனித்துணர்க. " பழநியுள் குமர குறத்தைக்குப் பாங்காம் பெருமாளே " (585) என்ற அருணகிரியார் வாக்கால்

ஈண்டு 'மடந்தை' என்றது வள்ளியையே என்பதுணர லாம். மேலும், நக்கீரரும், ஒருமுகம், "மடவரல் வள்ளி யொடு நகையமர்ந்தன்று" என வள்ளியோடு மகிழ்தலையே சிறப்பாகக் கூறியிருத்தல் காண்க.

திருப்பரங் குன்றத்தில் உலகிற்கு வேருய்த் தனித்திருக் கும் பரநிலையினையும், திருச்சீரலைவாயில் கலப்பால் உலகமே யாய பருநிலையினையும், திருவாவிநன்குடியில் உயிர்க்குயி ராதல் தன்மையால் உடனும் நிலையினையும் முறையாக விளக் கினர் சிவன் முத்தராம் பெரும்புலவர். இங்ஙனம் புண்ணி யத் தலங்களொடு பொருத்தி இறைவனுடைய மூவகை இலக்கணங்களை யுணர்த்தாக்கால் வீடு விரும்பிய புலவர் இறைவனை யுள்ளவாறுணர்தலும் அவன் திருவடிப் பேற் றைப் பெறுதலும் கூடாமை யுணர்க. இறைவனுடைய இம்மூவகை நிலைகளையுணர்ந்த புலவர், இறைவனை இம் மூவகை நிலையில் வைத்து வழிபடுவோர் இவர் என்பதை யும், அவர் வழிபடு முறை இவ்வாறு என்பதையும் நன்கு உணர்ந்தாலன்றித் தாம் வழிபாடு செய்து பயன் எய்தல் இயலாது ஆகலின், அம்மூவகை நிலையில் வைத்து வழிபடு வோர் நிலைகளை, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர் சோலைமலை என்ற முப்பதியில் வைத்து முறையே விளக்கு கின்ருர். (தொடரும்)

ஞானச் செய்தி

K. இராமநாதன் செட்டியார்

ஏக இருட்டு: எங்கும் அடர்ந்த இருட்டு, ஏதோ கருத்த பொருள் நெருங்கிக் கிடந்தது போலிருக்கிறது. இந்த நள் ளிருள் நடுவே ஒரு பெரிய விருட்சம். மரத்தின் வேர் எங்கே யென்றும், நுனி எங்கேயென்றும், அகலம் எவ்வள வென்றும் சொல்ல முடியாத அளவு பெரியது. அம் மரம், கெட்ட நாற்றம் வீசும் பூக்கள், முள்மலிந்த இலைகள், முருடு நிறைந்த கிளைகள், விஷம்போன்ற பிசின் ஒழுகும்வாதுகள். அந்த விஷ விருட்சத்தில் கோடிக்கணக்கான உயிர்கள் அலைந்து திரிகின்றன. ஆனல் ஒன்றையொன்று பார்ப் பதில்லை. ஒன்றுடனென்று சேர்வதில்லை. இருள் ஒன்றி னுக்கு ஒன்றை மறைக்கிறது. அவ்வுயிர்கள் எல்லாம்

பின்னிக்கிடக்கும் மரத்திடையே பயமின்றிச் சஞ்சரிக்கின்றன. பற்பல காலமாகச் சஞ்சரித்து வருகின்றன.

அருள் வீழ்ச்சி : ஒரு நாள் மறைந்து நின்ற ஒருவரிடமிருந்து ஒரு சுடரொளி ஊடுருவிச்சென்று ஒரு பெரிய கிளையின் மேல் விழுகிறது. அவ்வெளிச்சம் "டார்ச் லைட்" போல் ஒளியை நேராகப் பாயச் செய்கிறது. அக்கிளையில் ஒரு மனிதன் கஷ்டப்பட்டுக் கண் திறந்து பார்க்கிறான். ஒன்றுந்தோன்றவில்லை. அவ்வெளிச்சத்தையோ, வெளிச்சம் புறப்படும் இடத்தை நோக்கியோ, வெளிச்சம் செலுத்துபவனையோ பார்க்க முடியவில்லை. கண்ணைத் துடைத்துக் கொண்டு தன்னைச் சுற்றியும் பார்க்கிறான். திடுக்கிடுறான். வெறிக்கிறான். கலங்குகிறான். உடல் நடுங்குகிறது. ஏன் ? அக்கிளையிலே பல உயிர்கள். அவைகள் இவனைக் காணவில்லையாயினும், இவன் அவைகளைக் காணுகிறான். அருகாமையிலே புலி, சிங்கம் ; பக்கத்திலே படமெடுத்துத் தலைதூக்கி நிற்கும் பாம்பு. இன்னும் எண்ணிலாத கோர ரூபங்கள். மரத்திலிருந்து குதித்துவிடல் நன்றெனத் தோன்றுகிறது. ஆனால் விழும் இடம் எப்படி இருக்குமோ, எவ்வளவு தூரமோ என்ற எண்ணம் குதிப்பதைத் தடுக்கிறது. மனம் இவ்வாறு தள்ளாடும் சமயம் சுடரொளியும் மறைந்து விடுகிறது. ஆயினும் கண்ணால் கண்டகாட்சி கருத்தைவிட்டு அகலவில்லை. வெளிச்சமின்மை பயத்தை அதிகப் படுத்துகிறது. கண்ட கஷ்டங்களை மனம் பன்மடங்கு அதிகப் படுத்தி நினைக்கிறது. ஆனால் விழுந்தால் பிழைக்க முடியுமோ ? போகுமிடத்தில் இதனினும் பொறுக்கமுடியாத கஷ்டமிருக்கலாம். சிங்கம் பிடரிமயிரை அசைப்பதாகத் தோற்றம். புலி வாயைப் பிளப்பதாக நினைப்பு. பாம்பு சீறிக்கொண்டு நெருங்குவதாக எண்ணம். "ஐயோ ! இனிப் பொறுக்கமாட்டேன்" என்று கதறுகிறான். தன்னினைப்பு சிறிதும் இன்றி விழுகிறான், விழுந்துகொண்டே இருக்கிறான். அப்பா ! எவ்வளவுதூரம் ! இவன் கதி என்ன !

குருட்டம்மை : விரைந்துவரும் மனிதனை ஒரு தெய்வப் பெண் கையேந்தி வாங்குகிறாள். அப்பெண் தன் இரு கண்களையும் மூடிக்கொண்டிருக்கிறாள். மனிதனை மடியில் வைத்துக்கொள்ளுகிறாள். அவனுக்கு வேண்டிய உதவிகள் யாவற்றையும் அவன் கேட்காமல் நேரந்தப்பாமல் செய்

கிறாள். உண்ண உணவும் உடுக்க ஆடையும் கிடைக்கின்றன. குறைவு ஒன்றும் இல்லை. கஷ்டம் சிறிதும் இல்லை. மனச் சஞ்சலமே கிடையாது. விஷவிருட்ச ஞாபகம் கொஞ்சமுமில்லை. ஒவ்வொரு நாள் வாழ்க்கையும் முன் நாள் வாழ்க்கையைச் சிறிதும் வேறுபடாமல் ஒத்திருந்தது.

அழகிய அன்னை: இவ்வாறு வாழும் நாளில், ஒரு நாள் பெண் தெய்வத்தைப் பார்த்து மனிதன் கூறினான். "அம்மையே, உன் அன்பு பெரிது..."

"நாளின்பின் நாள்கழிய நாளையென்ப தொன்றறியாத்
துன்பமறியாத் தொடக்கறியா வாழ்க்கை துய்த்தேன்"

(Paradise Lost : மொழிபெயர்ப்பு, சுவாமி விபுலாநந்தர்)

ஆனால் எனக்கு ஒரே மாதிரி வாழ்க்கையில் பிரியம் குறைந்து வருகிறது. வெளியில் சென்று பல இடங்களைப் பார்த்து வரவேண்டுமென்று பல இடங்களைப்பார்த்து வர வேண்டுமென்று ஆசை வருகிறது. ஆகையால் அவைகளை யெல்லாம் நீ எனக்குக் காட்டவேண்டும். இன்னொரு விஷயம், நான் எங்கிருந்து வந்தேனென்று உன்னைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சில நாளாக ஒரு ஆசை இருக்கிறது. இந்த உதவிகளையெல்லாம் நீதான் எனக்குச் செய்யவேண்டும்.

அதனைக் கேட்ட அன்னை கூறினாள். குழந்தாய், அமைதியான வாழ்க்கையை விட்டு ஏன் கஷ்டத்தைத் தேடிக்கொள்ளுகிறாய்? அப்பா, எனக்கோ கண்ணில்லை. நீ எங்கிருந்து வந்தாயென்று யானறியேன். ஆனால் நீ என்னிடம் வந்தது முதல் யான் செய்யவேண்டிய கடமைகளில் ஒரு சிறிதும் தவறியதில்லை. பல இடங்களுக்குப் போய்ப் பார்க்க என்னால் முடியாது. ஆனால் என்னை நம்பிப் பிரயோஜனமில்லை. ஆனால் நான் உனக்கு ஒரு உதவி செய்யக்கூடும். எனக்கு ஒரு சகோதரியுண்டு. அவள் என்னைப்போலல்ல. நானோ கறுப்பு. அவளோ சிவப்பு. நான் கண்ணில்லாதவள். அவளுக்கு அக்குறையில்லை. நான் படியாதவள். அவள் படித்தவள், அவள் பல நாடுகளைப் பார்த்தவள், பல விஷயங்களை அறிந்தவள். அவளிடம் உன்னை ஒப்புவிக்கிறேன். சில நிமிடம் தியானஞ்செய். அவள் உன்முன் தோன்றுவாள். அவளையடுத்து வாழ்

வாயாக. ஆனால் என்னை மறந்து விடாதே. நீ தோன்றியதும் காப்பாற்றியவள் யானே. செய்நன்றி மறந்தவர்க்கு உய்வில்லை.''

அம் மனிதன் சில நிமிடங்கள் தியானஞ் செய்தான். அழகே உருவெடுத்த பெண் நின்ருள். அறிவு ததும்புங் கண்கள் உயர்ந்த உடைகள். அம் மனிதனை அழைத்துக் கொண்டு பல இடங்களைக் காட்டினாள். ஓடிச்செல்லும் ஆறுகள், ஓங்கி வளர்ந்த மலைகள், பாடித்திரியும் பறவைகள், குலாவிக் குதிக்கும் குழந்தைகள், கரைகாணக் கடல்கள்—இவ்வாறு காட்சிகள் பல கண்டான். பல இடங்களைப் பார்த்தான். பல நூல்களைப் படித்தான். பல விஷயங்களைத் தெரிந்துகொண்டான். பல நல்ல மொழிகளைக் கேட்டான். மிகச் சந்தோஷப்பட்டான். பலருடன் பழகினன். அறிவை வளர்த்துக்கொண்டான். அழகிய தெய்வப் பெண் ஊட்டும் அறிவில் உருசியில்லாமலா இருக்கும்? அவனுக்குத்தான் நினைத்தவாறு படிக்கவும், கேட்கவும், பார்க்கவும், திரியவும், பாடவும், ஆடவும் ஒரு சுயேச்சை இருந்தது. அறிவு வாழ்க்கையே உயர்ந்த வாழ்க்கை என்பதையும் சுயேச்சையே மனிதன் பிறப்புரிமை என்பதையும் நினைக்கும் போதெல்லாம் அவனுடைய மகிழ்ச்சி அளவில்லாது பெருகியது.

இவ்வாறு அறிவு வாழ்க்கை நடத்தும் நாளில் சில கஷ்டங்கள் தோன்றின. களிப்போடும் கருத்தோடும் படிக்கும் போதெல்லாம் தன் உணவை மறந்தான். வெளி விஷயங்களைப் பார்க்கும்போது, ஒரே விஷயம் பல சமயங்களில் பல விதமாகத் தோன்றின. மலை தூரத்தில் பார்க்கும் போது சிறிதாகத் தோன்றியது. கிட்டத்தில் பார்க்கும் போது முழுமலை கண்ணுக்குத் தெரியவில்லை. காலையில் ஒரு மாதிரியாகவும், மாலையில் ஒரு மாதிரியாகவும் தோன்றியது. பார்க்குமிடத்திற்குத் தகுந்தாற்போல் காட்சி மாறுபட்டது. நேற்றுக் காலை பார்த்த காட்சி இன்று காலையில்லை. இருவர் ஓரிடத்திருந்து ஒரு காலத்தில் பார்த்தாலும் இருவருக்கும் வேறுவிதமாகத் தோன்றியது. புத்தகங்களுக்குள் நுழைந்தாலோ இம்மாதிரி இன்னல்கள் இன்னும் அதிகம். பெரியவர்களுக்குள் எவ்வளவு கருத்து மாறுபாடு. முரண்பாடு. சொல்லப்படாதது எத்தனை? சொல்லப்

பட்டதில் ஐயந்தருவன எத்தனை? இந்த பூரணமற்ற, தவறான, சந்தேகம் மலிந்த அறிவையடையப்பட்ட சிரமங்கள் எவ்வளவு? பட்டும் பயனென்ன? நிறைவின்மை, தவறான எண்ணங்கள், எடுத்ததற்கெல்லாம் சந்தேகம், மனச்சஞ்சலம், அலைந்து கால் தேய்ந்தது, படித்துக் கண் கெட்டுப்போயிற்று. நினைந்து நினைந்து நெஞ்சம் புண் ஆனது ஆயினும் அன்னைமேல் வைத்த அன்பு தளரவில்லை.

தெய்வத்தாய் : வாழ்க்கையின் புதிர்கள் அதிகரித்துக்கொண்டே வந்தன. பல கேள்விகட்குப் பதில் கிடைத்தன வாயினும், அவைகளில் பல விளக்கமாகவில்லை. மனதில் பதியவில்லை. உயிரொடு கலக்கவில்லை. பலர் சந்தேகங்களை அவன் தீர்த்தாலும், அவன் சந்தேகம் தீரவில்லை. இக்கஷ்டங்களை எல்லாம் அம்மையிடம் தெரிவித்தான், அவளும் அவனுக்கு உதவிசெய்ய எண்ணினாள். அம்மை சொன்னாள். "மகனே, நாங்கள் மூன்று சகோதரிகள். நீ இதுவரை பார்க்காத சகோதரி எங்களிலும் மிகச் சிறந்தவள். அவளை உனக்குக் காட்டித்தருகிறேன். அன்புடன் தியானித்திரு சிலகாலம். ஆர்வத்துடன் அவளே கதியென வெண்ணு. நீ நன்னிலையடைவாய்.''

மனிதனும் அவள் தரிசனத்திற்குக் காத்திருந்தான். கசிந்துருகினான். அம்மை வந்தருள் புரியவில்லை. கவலை கொண்டான். ஏங்கினான். யாவற்றையும் மறந்து அவளையே எண்ணினான். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கினான். நாட்பல சென்றன. கருதிய எண்ணம் கைகூடவில்லை. அவ்வரசியைக் காணா வாழ்க்கையை மதியேன் அவனடியை எவ்வாறாயினும் அடைவேன் - என்று உறுதிகொண்டான்.

ஈங்குனை யடைந்தனன் எனக்கு நின்னிரு
பூங்கழல் அல்லது புகலொன்று இல்லையால் ;
நீங்கிலன் ; நீங்கிலன் ; நின்னை என்றுமே.

கடுந்தவஞ் செய்தான். உற்றார் உறவினர் யாவரையும் மறந்தான். உலகை மறந்து உயிரை மறந்து அம்மையையே கதியென நம்பி இடையறாது தவங்கிடந்தான். கடைசியில் கடைக்கண் நோக்கியது அத்தெய்வம். கண்விழித்தான், கண்டான்.

தீட்சை : தேவி சிம்மாஸனத்து கொலுவீற்றிருந்தாள். அழகிய உருவம் வெண்மையான தூய ஆடை. சாந்தம் ததும்பும் முகம். நெற்றிக் கண்ணுடன் மூன்று கண்கள். நெற்றிக்கண் சிறிதே திறந்திருந்தது. மற்ற இரு கண்ணையும் மூடியிருந்தாள். தியான நிலையிலிருப்பது போலிருந்தாள். மனிதன் வணங்கினான், வாழ்த்தினான். யாவற்றையும் அறிந்துகொள்ள விரும்பினான். தேவி அவனை அருகில் அழைத்தாள். படுக்கச்செய்தாள். முகத்தை மடியில் வைத்துப் படுத்தான். 'அம்மா படுத்துக் கண்ணை மூடிக் கொண்டால் நான் எப்படிப் பார்க்கமுடியும் ; என்றான் ; அம்மை, 'உனக்கென்ன கவலை' என்றாள். தனது கையால் அவனைத் தடவிக்கொடுத்தாள். உடம்பு மயிர்க்கூச்சல் எடுத்தது என்ன விளையுமோவென்ற பயமும் தோன்றியது. திகைத்துக் கிடந்தான். தாய் தலைகுனிந்து அவன் காதில் ஒரு வார்த்தை சொன்னாள். உடனே அவன் மதி கலங்கினான். மயக்கம் எய்தினான். கடல் தன்னை விழுங்குவது போல் தோன்றியது. 'ஏனோ இந்த அம்மையிடம் அகப்பட்டுக்கொண்டோம். இனி நமக்கு வருங்கதி என்னமோ ? அறிவை யிழந்து அடிமையாயினோமே !' என்ற பல எண்ணங்கள் ஒரே நொடியில் தோன்றி மறைந்தன. தூங்கியவன்போல் கிடந்தான். உடலில் ஒரு பிரகாசம் ஏற்பட்டது. சிறிது நேரஞ் சென்றபின் தெளிந்து எழுந்தான். முகத்திலும் ஒரு ஒளி, அன்னையின் மலர்த்தாளில் விழுந்தான். வாயார வாழ்த்தினான் :

" தாயே, தயாநிதியே, நின்னிடம் பெற்ற செல்வம் வேறு யாரிடம் பெற்றேன் ? வேறு யார் பெற்றார் ? காட்டாதனவெல்லாங் காட்டியருளினாய். கேளாதனவெல்லாம் கேட்கச் செய்தாய். என்னே நின் பேரருள். இன்றே மாயத்திரை அறுந்து விழுந்தது. தூய ஞான நாட்டம் பெற்றேன்.

" ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் - காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையுங் கண்டேன் என்னை !"

(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை)

"I hear beyond the range of sound,
I see beyond the range of sight,
New earths, and skies and seas around,
And in my day the sun doeth pale his light"
—*Hendry David Thoreau*

இது அதிசயம்! யாவும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது. மரமும் தெரிகிறது. அதன் வேரும் தெரிகிறது. அது இனி அடையும் நிலையுந்தெரிகிறது. தெரியாதது ஒன்றில்லை. நின் அருளைக் கனவிலும் நினைவிலும் மறவேன். நின் அருளே எனக்கினி வாழ்வு. பாவித்துதித்தான். என்புருகிப் பாடினான். ஆனந்தக் கண்ணீருகுத்தான்.

அவன் வாழ்க்கையால் பலர் நன்மையடைந்தனர். அவன் பிறர் அறியாமையை நீக்கினான். ஆறுதல் தந்தான். இருளைப் போக்கினான். இன்னல்களைப் போக்க வழிகாட்டினான். ஒளிபரவியது. சாந்தம் பரவியது. அவனுதவியால் மக்கள் வாழ்க்கை மலர்ந்தது.

ஆணவம் : இக் கதை மூலமாக நாம் அறிந்துகொள்ள வேண்டுவது என்னவென்று கவனிப்போம். உயிரானது உடலெடுக்கு முன்னர் ஆணவத்தில் அழுந்திக்கிடக்கிறது. உயிர் அப்பொழுது கிடக்குமிடத்தை ஆணவக்காடு என்றும் கார் இருள் என்றும் பலர் கூறுவர். விஷ விருட்சம்போல் ஆணவம் பரந்து அளவற்றுக்கிடக்கிறது. விஷ விருட்சத்தில் அநேக உயிர்கள். ஆணவத்தில் கிடக்கும் உயிர்கள் எண்ணில. அம்மரத்தில் திரிந்த மனிதன்பேரில் வெளிச்சம் பட்டதுபோல, பெருமானது அருள் உயிர்களின்மேல் படுகிறது. வெளிச்சத்தைப் பார்க்க முடிவதில்லை. அருளையுங் காணமுடியவில்லை. புலி சிங்கம் பாம்பு மனிதன் குதிப்பதற்குக் காரணமாதல்போல், வெறுப்பும் விருப்பும் மூலகன்மமும் பிறப்புக்குக் காரணமாகின்றன. மனிதன் தூரம் குதித்து வெகுதூரம் வந்தான். ஆணவக் காட்டை உயிர் தாண்டிப் பிறப்பெடுத்தபோது அது தன் பிரயாணத்தில் வெகுதூரம் வெகுதூரம் வந்துவிட்டது.

" பல்லுயிர் வெவ்வேறு படைத்தும் அவைகாத்தும்
எல்லே யிழைப்பொழிய விட்டுவைத்தும்—தொல்லேயுறும்
அந்தம் அடிநடு வென்றெண்ண வளவிறந்து
வந்த பெரியவழி போற்றி..." (போ. ப. வெண்பா)

இயல்புச் சக்தி : விஷ விருட்சத்திலிருந்து வந்த மனிதனைத் தாங்கியது ஒரு தெய்வப் பெண் என்றும், அவள் எத்தகையள் என்பதும், அவள் செய்த உதவி என்ன என்பதும், பல உதவிகள் செய்தும் அவள் மனிதனுக்கு ஏன் ஆறுதல் தரவில்லேயென்றும் நம் கதையில் பார்த்தோம். உயிர் உடலெடுத்ததும், அதற்கு ஒரு சக்தி உடனே ஏற்படுகிறது. அச் சக்தியை இயல்புத்தாயெனலாம். இச்சக்திஉயிர் ஆதி முதலில் உடலெடுத்தபோதும் காணலாம். நம் பூர்வீக சரித்திரத்தில் மக்கள் நிலேயைக் கவனித்தாலும் அறியலாம். பிறந்த குழந்தையிலும் இச் சக்தியைப் பார்க்கிறோம். இச் சத்தியை ஆங்கிலத்தில் instinct என்பர். குழந்தை பிறந்த உடனே அதற்குப் பால் சப்பச் சொல்லிக் கொடுப்பார் யார்? இயல்புத்தாய். இயல்பாக எழும் செய்கைகள் தாழ்வதில்லே. தவறுவதில்லே. இயற்கையறிவால் உடலுக்கு வேண்டிய யாவற்றையும் தேடிக்கொள்ளுகிறோம். இயல்பு உதவிமட்டும்கொண்டு வாழ்ந்த ஆதிமனிதனுக்கும் குழந்தைக்கும் கஷ்டங்கள் இல்லே.

அறிவு : மனிதனுக்கு ஒரு காலத்தில் அறிவை வளர்க்க வேண்டுமென்ற ஆசை பிறக்கிறது. இயல்பன்னே அறிவன்னேயைக் காட்டியதுபோல், இயற்கையாகவே அறிவில் ஆசை தோன்றுகிறது. ஆதாம் அறிவுதரும் பழத்தை இறைவன் ஆணேக்கு விரோதமாக விரும்பியதும் உண்டதும், அதனுல் அறிவுபெற்றதும் யாவரும் அறிந்த கதை.

(தொடரும்)

விநாயகப் பிரபாவம்*

உலகத்திலுள்ள மக்களனைவரும் உயர்வையே விரும்புகிறார்கள். மக்களின் உயர்வு அவர்கள் ஊக்கத்தின் அளவினதாகும். "வெள்ளத் தனையமலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனைய துயர்வு" என்ற திருக்குறளை நோக்குக. எடுத்துக்காட்டுவமையணி வாயிலாகத் திருவள்ளுவர் ஊக்கமே உயர்வுக்குக் காரணம் என்பதை இனிது விளக்குகிறார். ஊக்கமுடன் முயற்சிப்போரைத் தடைசெய்து அவர்கள் மனத்தைக் கலங்கவைப்பது இடுக்கண். இவ்விடுக்கண் தெய்வத்தால், பொருளின்மையால், மெய்வருத்தத்தால் வருதல்கூடும். "வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக்கெடும்" என்ற குறட்குப் பரிமேலழகர் உரை கூறுமிடத்துத் "தன் உள்ளத்தான் ஒன்றனை நினைக்க அத்துணையானே கெடும்" என்று குறிக்கிறார். எவ்வொன்றனை நினைக்க அதன் துணையால் இடும்பை கெடும்? அவ்வொன்றே விக்நேஸ்வரர் என்ற விநாயகர். "பிடியத னுருவுமை கொளமிகு கரியது வடிகொடு தனதடி வழிபடு மவர் இடர்கடி கணபதி" என்று திருஞானசம்பந்தரும் "என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்......அத்தி முகத்தான்" என்று நம்பியாண்டார் நம்பிகளும் பிறரும் திருமுறைகளுட் கூறுவனவற்றை நோக்குக.

இனி விநாயகர் என்ற சொல்லின் பொருளைச் சிறிது கவனிப்பாம். வி + நாயகர் = நாயகனில்லாதவர் (விமலன் = மலமில்லாதவன் என்பதைப்போல). அதாவது தம்மை நடத்துபவ ரில்லாதவர், சுதந்திரர், ஈண்டு கடவுட்டன்மைகள் எட்டனுள் ஒன்றாகிய தன் வயத்தனாதல் வலி

---

*கோவூர் ஸ்ரீசுந்தரேசுவரர் ஆலயத்தில் நடந்த பிரஹ்மோத்ஸவத்தில் முதல்நாள் (22-5-39ல்) ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் நிகழ்த்திய உபந்யாசத்தின் சுருக்கம். திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் குறிப்பெடுத்தெழுதியது.

யுறுத்தப்படுதலை நோக்குக. விநாயகருடைய அஷ்டோத்தர சஹஸ்ர நாமங்களுள் ஒன்று " ஓம் அநீஶ்வராய நம: " என்பது. இதன் பொருள் தன்னை நடத்தும் ஈசுவரன் அல்லது நாயகன் இல்லாதவன் என்பதாகும். மேலும் " முதாகராத்த மோதகம் சதாவிமுக்திதாயகம் கலாதராவதம்ஸகம் விலாசலோக ரக்ஷகம் அநாயகைகநாயகம் விநாசிதேபதைத்யகம் நதாசுபாசுநாசகம் நமாமிதம் விநாயகம் " என்ற சுலோகத்தில் அநாயகைகநாயகம் என்ற தொடரை ஆராய்க. அநாயக+ஏகநாயகம் என்ற பதங்களாக இத்தொடர் பிரிகின்றது. அதாவது தமக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும் தாமே எல்லா நாயகர்கட்கும் நாயகராகிய ஏகநாயக நிலையிலும் உள்ளவர் விநாயகர் என்று இத்தொடர் பொருள் தருகின்றது. வி+நாயகர்=விசேஷமான, எல்லோருக்கும் மேலான நாயகர் என்றும் பொருளுண்டு. இவ்விருபொருளும் முடிவில் ஒரு கடவுளையே குறித்தலை நோக்குக.

சிவஞான சுவாமிகள் கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழில் இவ்வுண்மையை அழகாகக் கூறுகிறார்.

" ஏர்கொண்ட தன்னைத் தனைப்பவரும் ஊருநரும் இலரென்பதுலகு தேறற்கு - எடுத்தவெம் பாசமோ டங்குசந்தன் காத்தேந்தி மததாரை சிதறிப், பார்கொண்ட எண்திசைத் தறுகட் களிற்றுடல் பனிப்பச் செவிக்கா லெழீஇப் - பகிரண்ட முற்றும் புகுந்துலாய்க் கலைசையிற் பதியுமோர்களிறு "

இப்பாடலில் விநாயகர் கையிலுள்ள பாசம் அங்குசம் ஆகிய இரண்டும் குறிக்கும் உண்மை அழகாக விளக்கப்படுகிறது. பாசமும் அங்குசமும் யானைப் பாகன் கையிலிருப்பவை. ஆனால் இங்கு யானையிடம் உள்ளன. எனவே இந்த யானையை அடக்கும் பாகர் (அல்லது நடத்தும் நாயகர்) இல்லை, இந்த யானை நாயகனில்லாத விநாயக யானை. பாசமும் அங்குசமும் பாகனிடத்துள்ளவை, இங்கு விநாயகரிடமுண்மையால் இவர் ஒரு பாகராகின்றார். இவர் நடத்தும் யானைகள் யாவை? உயிர்களாகிய யானைகளை நடத்துகிறார் இக்கருத்தை மிக அழகாக,

" மும்மை மலமா மத முற்றுப்போத முழுத்தறியற வீசி
முகிழ்த்தலர் அன்பின் சங்கிலியுதறி முதிர்ந்த அருட்கூடத்

திம்மென நீங்கி வெளிக்கொடு புவன மெனுங்கடுவனமோடி
எப்பாகர்க்கு மடங்கலவாகி யியங்கும் உயிர்க்கரிகள்
தம்மை விடாது தொடர்ந்து பிணிப்பத் தரும் அங்குசபாசம்
தாங்குதல் கண்டும் ''

என்று ஷ பிள்ளைத் தமிழில் மற்ெருரு பாடல் கூறுவதை நோக்குக.

சாதாரண வழக்கத்தில் பெண் தன் கணவனை நாயகன் என்கிருள், வேலைக்காரன் எஜமானனை நாயகன் என்கிருன், வன்னிய குலத்தவர்கள் நாயகர் என்றே பட்டப் பெயர் வைத்துள்ளார்கள். இவ்வாறு கூறப்படுவோ ரெல்லாரும் உடல்பற்றிய நாயகம் செலுத்துபவர்களேயாவர். உயிரைச் செலுத்தும் நாயகம் விநாயகருக்கே உரியது. ஒரு பாகன் யானையை மேடுபள்ளம் தவிர்த்துச் சமபூமியில்நடத்துவான். அஃதே போல் விநாயகரும் உயிர்க்கரிகளை, மேடாகிய விருப்பம் பள்ளமாகிய வெறுப்பு என்பவற்றைத் தவிர்த்துச் சமபூமியாகிய இருவினை யொப்பின் வழிநடத்துகிருர்.

இத்தகைய நாயகரை நாம் அறிந்துகொள்ள வேண்டாமா? '' தம்மானை யறியாத சாதியாருளரே '' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுவதை மறக்கலாமா? விநாயகருடைய பெருமைகளைப் பல உபநிடதங்கள் விரிவாகக் கூறுகின்றன. கணபதி உபநிஷத்தில் '' த்வம் ஆநந்தமய:த்வம் பிரஹ்ம மய: த்வம் சச்சிதாநந்த அத்விதீயோஸி '' என்றும் '' த்வம் குணத்ரயாதீத:, த்வம் தேஹத்ரயாதீத:, த்வம் காலத்ரயாதீத:'' என்றும், '' சர்வம் ஜகத் இதம் த்வத் தோஜாயதே, சர்வம் ஜகத் இதம் த்வத்தஸ்திஷ்டதி, சர்வம் ஜகத் இதம் த்வயிலயமேஷ்யதி '' என்றும் கூறப் பட்டுள்ளன. இவற்றின் பொருள் சுருக்கமாகக் கீழ்வருமாறு:—விநாயகர் ஆநந்தமயமாயிருப்பவர், பெருமையுடையவர், சச்திதாநந்த ஸ்வரூபி, குணங்கடந்தவர், தேகங் கடந்தவர், காலங்கடந்தவர், முத்தொழில் நடத்துபவர் என்பதாம். இப்பெருங் கடவுளை வழிபடுமாறு இவ்வுபநிடதம் இறுதியில் '' யஏவம்வேதா மஹாவிக்நாத் பிரமுச்சதே மஹா தோஷாத்பிரமுச்சதே சர்வ வித்பவதி சர்வ வித்பவதி '' என்று கூறுகிறது.

விநாயகரைப் பிரணவ ஸ்வரூபி என்று கூறுவது அனைவரும் அறிந்த தொன்று. "ஓம் ப்ரண வானன தேவாய நம:" என்ற மந்திரம் அவர் நாமாவளியிலிருப்பதை யறிக. ஓம் என்ற பிரணவம் தமிழ் நாட்டில் பிள்ளையார் சுழியாக மாறிச் சுருங்கிப் பழைய வழக்கில் சாசனங்கள் முதலியவற்றின் முதலிலும் இறுதியிலும் எழுதப் பெற்றது. பழைய காலத்தில் வேதம் ஓதுவோர் ஓம் என்றே தொடங்குவர். இக்காலத்தில் ஹரி ஓம் என்கின்றனர். பதினொராந் திருமுறையில் மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையுள் (அ-வது பாட்டில்) அதிராவடிகள் "மொழியின் மறை முதலே...எங்கள் கணபதியே" என்று கூறுவதை மறத்தலாகாது. பிரணவத்துக்கு வரிவடிவமும் ஒலிவடிவமும் உண்டு. வரிவடிவம் விநாயகர் உருவத்திலும் ஒலிவடிவம் அவருடைய ஆற்றலிலும் திகழ்கின்றன. ஓம் என்பது சமஷ்டிப் பிரணவம், அகார உகார மகாரங்களாகப் பிரித்தறிவது வியஷ்டிப் பிரணவம். அ+உ=ஓ என்பது வடமொழியிற் குணசந்தி யெனப்படும் (பாத+உதகம்= பாதோதகம் என்புழிப்போல), ப்ர + நவ = ப்ரணவ (=என்றும் புதியது) என்று வடமொழியிற் புணரும். பிரணவ சப்தம் "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே" என்ற திருவெம்பாவை வாக்கியத்தின் கருத்தை நினைவூட்டுகிறது. "ஓம் இத்யேகாக்ஷரே மந்த்ரஸ்தித : ஸர்வகத ஶிவ :", "ஓம் இத்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வஸந்தேயோகின : பிரணவம் சர்வவர்நானும் ஜீவபீஜ முதாஹ்ருதம்", ஓம் "நமோ ஹம்பதார்த் தாய சர்வவேதா யத்பத மாமநந்தி தபாம்ஸி சர்வாணிச யத்வதந்தி யதிச்சந்தோ பிரஹ்மசரியம் சரந்தி தத்தேபதம் சங்க்ரஹேண ப்ரிவீமி ஓம் இத்யேதத்", "ஹரஸ்ஸர்வஸ்ய ஹரணாத் விபுத்வாத் விஷ்ணுருச்யதே பகவான் சர்வ விக்ஞாநாத் அவநாதோமிதிச்ம்ருத :" என்ற வேதாகம வாக்கியங்கள் பிரணவத்தை ஒரு சிறிது விளக்குவன.

விநாயகருக்குப் பிரணவமேயன்றி விநாயக காயத்ரி என்ற மந்திரமு முண்டு. பதினாறுவகை மூர்த்தங்கள் விநாயகருக்குண்டு. கலியாண மாகாத ஒருவனைப் பார்த்து நம்மவர் "விநாயகருக்குப் பெண்பேசி முடித்தால் இவனுக்கும்

முடியும்" என்று கேலி செய்கின்றனர். இது பெரும் பாவம். விநாயகருக்கு சித்தி, புத்தி, வல்லபை என்ற மூன்று சக்திகள் உண்டு. பல ஆலயங்களில் தேவிமார் களுடன் விநாயகர் காட்சியளிக்கிறார்.

விநாயகருடைய உருவத் திருமேனியை உற்று நோக்கினால் பல அரிய உண்மைகள் புலனாகும். அவர் ஆணு மல்லர், பெண்ணு மல்லர், அலியுமல்லர். தலை யானைத்தலை, உடல் தேவ வுடல், கால் பூதக் கால், ஒற்றைக் கொம்பு முதலிய உறுப்புக்கள் உணர்த்தும் உண்மையை மிக அழகாகச் சிவஞான சுவாமிகள் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் காப்புச் செய்யுளில்,

" மணிகொண்ட கோடொரு மருங்குண்மையாற் பெண்மைவடி
வென்றுமஃ தின்மையோர்
மருங்குண் மையாலாண் மைவடிவென் றுமீதுகீழ்
மாறியதிருக் காட்சியால்
அணிகொண்ட உயர்திணையதென்று மஃறிணை யென்றும்
யார்க்கும் விளக்க அரிதாம்
ஐங்கரச் சிந்துரத்தின் கழற்செஞ் சரணம்
அஞ்சலித்துத் துதிப்பாம் "

என்று விவரித்தலைக் கண்டு மகிழ்க.

யானைக்குக் கன்னத்தில் மதஜலம் கசிவது வழக்கம். அஃதேபோல் விநாயகருக்கும் கன்னத்தில் மதம் பொழி கின்றது. என்ன மதம்? வலப்பக்கம் அறக்கருணையும் இடப்பக்கம் மறக்கருணையுமாகிய மதங்கள். " கருணை யென்னும் வெள்ள மதம் பொழிசித்தி வேழத்தை நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்" என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்துட் கூறுவதையும் " மதப்போர் பெற்ற அருள்" என்று செந்தில் நிரோட்டக யமக அந்தாதி காப்புச் செய்யுள் கூறுவதையும் நோக்குக.

விநாயகருக்குள்ள பல பெயர்களுள் தமிழ்நாட்டில் தாழ்ந்த அறிவுடைய மக்களுக்கும் தெரிந்தது பிள்ளையார் என்பது. முதலியார், செட்டியார், சாஸ்திரியார் என்ற சாதிப் பெயர்களுள் வரும் ஆர் விகுதி பிள்ளைமார் என்ற

விடத்துக் காணப்படுவதில்லை. பிள்ளையார் என்ற சொல் பிள்ளைமாரைக் குறிக்காது விநாயகரையே குறிக்கும். முருகன், வீரபத்திரன், விநாயகன் ஆகிய மூவரும் சிவ குமாரர்களாயினும் பிள்ளையார் என்ற சொல் விநாய கரையே குறிக்கும். பிள்ளையார் கோயில் என்றால் விநாய கர் கோயில் என்று பொருள் படுமே தவிர முருகன் கோயில் வீரபத்திரன் கோயில் என்று பொருள் படுவ தில்லை. இதிலிருந்து விநாயகரே சிறந்த பிள்ளையாகக் கருதப் படுதல் விளங்கும். இதற்குத் தகுந்த காரணமு முண்டு. சிறந்த பிள்ளை தாய் தந்தையரை வணங்கும், வழிபடும். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். குருவும் கடவு ளும் பின்னறி தெய்வங்களே. பிள்ளையாருக்கு ஐந்து கை களுண்டு. துதிக்கையில் குடங்கொண்டு நீர் திரட்டித் தமது அம்மையப்பரைப் பூசிக்கிறார். சதுர்புஜங்களுள் பின் னுள்ள இரண்டினில் உயிர்களாகிய நமக்காகப் பாசாங் குசங்களை வைத்துள்ளார். முன் கைகளுள் வலது கையில் ஒடித்த கொம்பு கொண்டு கயமுகா சுரனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றுகிறார். இடது கையில் மோதகம் தமக்கென வைத்திருக்கிறார். எனவே ஐந்து கைகளுள் தமக்கொன்று, தேவர்க்கொன்று, தாய் தந்தையர்க் கொன்று, நமக்கென்றிரண்டு உபயோகிக்கிறார். இவ்வுண் மையை அழகாகக் கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்துள்,

"பண்ணியம் ஏந்தும் கரம் தனக்காக்கிப் பானிலா மருப்பமர் திருக்கை, விண்ணவர்க்காக்கி யரதனக்கலச வியன்கரம் தந்தை தாய்க் காக்கிக், கண்ணிலாணவ வெங்கரி பிணித்தடக்கிக் கரிசினேற் கிரு கையுமாக்கும், அண்ணலைத் தணிகை வரைதளர் ஆபத்சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்"

என்று கூறுகிறார்.

தமக்கும் தாய் தந்தையர்க்கும் தேவர்க்கும் ஒவ்வொரு கையையும் நமக்கு மட்டும் இரண்டு கைகளையும் உபயோகிக் கும் விநாயகர் நமக்கு வேண்டுவன வெல்லாம் தருவார். நமக்கு வேண்டுவன இவையென்பதை நாமறியோம். நாம் விரும்புவனவற்றையே வேண்டுகிறோம். இது தவறு.

நமது பக்குவமறிந்து வேண்டுவனவற்றை நாம் கேளாமலே அவர் தருவார். "கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினர்" என்ற திருவாக்கின் படி வழிபாடொன்றே நமக்குரியது. பிள்ளையார் பூசை நாடோறும் செய்து வழி படுவோரிடத்திலே இலக்குமி என்று மிருப்பாள்.

" நல்லார் பழிப்பில்...விநாயகனே என்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே "

என்று கபிலதேவ நாயனர், மூத்த நாயனர் திருவிரட்டை மணிமாலை இறுதிச் செய்யுளுட் கூறுவதை என்றும் ஞாபகத்து வைக்கவும்.

நமக்குள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் களையும் விநாயகரே போக்குவார். விநாயகரை வழிபடும் அன்பர்களை ஆணவமலம் துன்புறுத்த எண்ணுவது நெருப்பைக் கடித்துத் துன்புறுத்த எறும்பு எண்ணுவதற்குச் சமானம் என்று நம்பியாண்டார்நம்பிகள் உவமைச் சுவை மலியக் கூறுகிறார்.

" மருப்பை யொருகைக் கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பை யடிபோற்றத் துணிந்தால்—நெருப்பை
அருந்த எண்ணுகின்ற எறும்பன்றே அவரை
வருந்த எண்ணுகின்ற மலம் "

அவ்வாறே கன்ம மலமும் நசிக்கும் செய்தியைக் கபில தேவ நாயனர்,

" கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல்—மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம் "

என்று கூறுகிறார்.

மாயாமலம் அகல்வதை அதிராவடிகள் " மணிசிந்து கங்கைதன் மாணக்குருளைய...பிடித்தோர்க்கில்லை பேது

றலே'' என்று கூறுகிறார். ஔவையார் அகவலுள் "மாயாப் பிறவி மயக்கம் அறுத்து" என்பதும் நினைதற்பாலது.

விநாயகருடைய நிறம் சிவப்பு. சில கோயில்களில் சிவப்புப்பொடி பூசிய விநாயக உருவங்களைக் காணலாம். சிவப்பு வஸ்திரம் சிவப்புப் புட்பங்கள் முதலியன விநாயகருக்குப் பிரீதியானவை என்று நூல்கள் கூறுகின்றன. விநாயகருக்குரிய நைவேத்திய வகைகளை அருணகிரிநாதர் "இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடன்நெய் எள்பொரிய வல்துவரை இளநீர்வண் டெச்சில் பயறப்பவகை பச்சரிசி பிட்டுவெள ரிப்பழம் இடிப்பல்வகை தனிமூலம் மிக்கஅடி சிற்கடலை பக்ஷணம்'' என்றும், "முப்பழம் அப்பமும் நிகழ் பால் தேன் நெடியவளை முறி இக்கொடு லட்டுகம் நிரவில் அரிசி பருப்பவல் எள்பொரி நிகரில் இனிய கதலிக்கனிவர்க்கமும் இளநீரும்'' என்றும் கூறுகிறார். விநாயக சதுர்த்தி முதலிய சிறந்த நாட்களில் ஆயிரம் மோதகம் நிவேதனம் செய்வது சிறந்ததென நூல்கள் கூறுகின்றன.

விநாயகர் குருவாக வந்து உபதேசம் செய்து அருள் புரிவதை ஔவையார்,

"குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி''

என்று கூறுகிறார். முத்தி தருவதையும் "இருத்தி முத்தி இனிதெனக் கருளி'' என்று குறிக்கிறார். ஔவையாரைத் தும்பிக்கையாற்றூக்கித் திருக்கோவலூரிலிருந்து விண்ணுலகிற் சேர்ப்பித்த விநாயகர் உதவியும் மறத்தற் பாலதன்று. நாமும் விநாயகரை வழிபட்டு மேல்நெறி சேருவோமாக.

Reg. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 30 | ஹேவிளம்பி ஆடி 1957 ஜூலை | இதழ் 7

சமயவாழ்க்கையும் கூடா ஒழுக்கமும்

ஆசிரியர்

பிறநாடுகளிலிருந்து நமது நாட்டிற்குப் பல புதிய பழக்கங்கள் வந்திருக்கின்றன. அவைகளில் ஒன்று புகையிலைப் பழக்கம். புகையிலை அமெரிக்க நாட்டுச் செடி. நமது நாட்டில் அது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் இருக்கவில்லை. அதன் இலையில் ஒருவகைக் காரச் சத்து இருக்கிறது. அது உடலில் உள்ள நரம்புகளை மயக்குகிறது. புகையிலையைப் பொடியாக்கி மூக்கின் உறிஞ்சுவது ஒரு கொடிய பழக்கம். அதனைப் பொடி போடுவது என்பார்கள். அத்தூள் மூக்கில் எறினால் மூக்கின் உள்ளிருக்கும் நுட்பமான நரம்புகள் சுருசுருப்படைந்து பிறகு மயக்கமுற்று ஒருவித இன்பம் தருகின்றது. இந்தப் பழக்கம் கட்குடியைப் போன்று ஒருதடவை ஏற்றுக்கொண்டால் அது மீண்டும் மீண்டும் தூண்டிவிடும். சமய வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் இந்தப் பழக்கத்தால் தங்கள் வழிபாட்டிற்கு மிகுந்த தடை ஏற்படுவதை நேரில் அறிவார்கள். மூக்கும் அசுத்தமாகும், சளியும் தொந்தரவுபடுத்தும், துணிமணிகளும் தூய்மைகெடும்.

இனி புகையினால் கிடைக்கும் மற்றொரு பொருள் சுருட்டு ஆகும். இது மலம் கழிப்பதற்குச் சாதகம் ஆகும் என்பர். ஆனால் உண்மையில் இதனால் நுரையிரலுக்கு மிகுந்த கேடு உண்டாகிறது. புகையிலையில் உள்ள நச்சுப்

பொருள் புகையாகி நுரையீரலில் புகுந்தால் அதனை மயக்கி அழித்துவிடும். ஆனால் குடிக்கும்போது மிகவும் இன்பமாக இருக்கும். குடிக்கப் பழகிவிட்டால் பின்னர் அதனை விட முடியாது. புளியமரத்துப் பேய்போல ஒரு ஆளைப் பிடித்து அடிமையாக்கிவிடும். எச்சில் உமிழும் பழக்கம் ஏற்பட்டு நோய்களை நாட்டில் பெருக்குவதற்கு இந்தப் புகையே அடிப் படைக் காரணம். நாடகம்,சந்தை,புகைவண்டி முதலியவை களில் இதன் கொடுமையை வெகு அதிகமாகக் காணலாம்.

புகை குடிப்பவர்கள் அதனைச் சிறிது பொழுதாகிலும் தடுக்க இயலாதவர்களாக இருக்கின்றனர். சமய வாழ்க்கை யில் ஈடுபடுகிறவர்கள் வழிபாடு இயற்றுவார்கள். அதற்கு நாடோறும் ஓரளவுநேரம் தரவேண்டும்.அவ்வாறு வழிபாட் டிடையிலே புகை குடிக்கும் நினைவு வந்துவிட்டால் அந்தச் சபலமானது வழிபடுபவனை ஒருநிலையில் இருக்கவிடாது. வழிபாட்டில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாகப் புகை குடித்தலிலேயே கவனம் செலுத்தி வழிபாட்டில் பலனை இழப்பார்கள். இந்தக் கேடுகெட்ட நிலை சிலநாள் அளவில் தடுக்கவே இயலாது. இறுதியில் வழிபாட்டிடையிலேயே பொடி போடுபவர்போல சுருட்டுப் பிடிக்கவும் தொடங்கு வார்கள். இக்காளில் கூலியாட்களும், வண்டிக்காரர்களும், கல் அடிப்பவர்களும், ஊர் சுத்தி செய்பவர்களும்கூட சுருட்டு முதலியவைகளைப் பிடிப்பதுபோல வழிபாட்டின் இடையிலும் சுருட்டு பிடிக்க நேரிடும். நந்தவனங்களில் நீர் இறைத்து மலர்களை எடுத்து மாலை கட்டும் தூய்மைப் பணி யாளர்களும் சில இடங்களில் புகை பிடிக்கக் கண்டிருக் கிறேன். ஒரு காவியுடையாளர் நந்தவனத்திற்கு நீர் இறைக் கும்போது வாயில் புகை விட்டுக்கொண்டே அப்பணி செய்து வந்தார். காவியணிந்த எத்தனை வெறுமை ஆட்கள் இந்த சுருட்டுக்கு அடிமைகளாகித் தம் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இதனை எவரே தடுக்கவல் லார்? சமயப் படிப்பு சரியாக இருந்தால் இக்கொடிய பழக்கம் நாட்டில் ஏறுமா?

இனி சுருட்டைக் காட்டிலும் கொடியவை பீடியும், சிகரெட்டு என்னும் சிறு சிருட்டுமாம். இவைகளைக் குடிக் கப் பழகுகிறவர்கள் நாள் ஒன்றுக்கு 40, 60 சதவீதம் பிடிப் பார்கள். சிறு குழந்தைகளும் இவைகளைப் பிடித்துத் தங்கள்

நுரையீரலைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். இந்தப் பழக்கத்தினால் மூச்சுப் பைகளில் புற்றுநோய் உண்டாகிறது என்று கூறுகிறார்கள். சென்ற 50 ஆண்டுகளாக விஞ்ஞான மருத்துவர்கள் இதனைச் சோதித்து வந்திருக்கிறார்கள். சரியான காரணம் கூற வகை கிடைக்காமல் போனபோதிலும் புற்றுநோய் உண்டாவதற்குப் புகைகுடித்தல் அனுகூலமாக இருக்கிறது என்றே கூறுகிறார்கள். இந்த நோய் மிக்க கொடியது. ஒருமுறை வந்துவிட்டால் அதற்குச் சிகிச்சை கிடையாது. மனிதன் அடைக்கலம் புகுவதே முடிவு. புற்றுநோய்க்கு அனுகூலமான செய்திகள்.

1. வாயில் புகையினால் மிகுதியான வெப்பம் தங்கி அங்கேயே அது அமைகிறது.

2. புகையில் புற்றுநோய் உண்டாக்கக் கூடிய சிறு தூசிகள் இருக்கலாம்.

3. புகை நரம்புகளை வாட்டுகிறதினால் புற்றுநோய்க்கு வளமை ஏற்படுகிறது.

இந்தக் காரணங்களை வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்தவகையில் சில கணக்குப் புள்ளிகள் கிடைத்தன.

1. சுவாசப்பைப் புற்றுநோய் பெண்களில் குறைவு. அவர்கள் புகை குடிப்பது குறைவு.

2. புற்றுநோய் நாட்டுப்புறத்தைவிட நகரங்களில் மிகுதி. அதே காரணம்.

சென்ற 35 ஆண்டுகளாகச் சுருட்டுப் பழக்கம் குறைந்து சிகரெட்டுப் பழக்கம் அதிகமாகிவிட்டது. 1920-ல் ஒரு மனிதன் 1·89 ராத்தல் சிகரெட்டு குடித்தான். 1953-ல் 10·09 ராத்தல் குடித்தான். சிகரெட்டு புகை சுவாசப் பைக்குள் செல்லுகிறது—சுருட்டோ வெளியே நின்றுவிடுகிறது.

ஆகவே சுருட்டைவிட சிகரெட்டு மிகவும் கொடியது. புற்றுநோய் வளர்ச்சிக்குச் சாதகம் ஆனது.

சிகரெட்டு சத்தினைச் சில சுண்டெலிகளுக்குத் தடவிப் பார்த்ததில் 100-க்கு 43 எலிகள் புற்றுநோய் கண்டு இறந்துவிட்டனவாம். ஆனால் மனிதனுக்கு இது எத்தனைப் பொருத்தமோ இன்னமும் கண்டு பிடிக்க முடியவில்லையாம்.

ஒருநாள் ஒன்றுக்கு 40 சிகரெட்டு வீதம் 25 ஆண்டுகள் குடிக்கிறவனுக்கு சிகரெட்டு குடியாதவனைக் காட்டி

லும் 52 வீதம் நுரையீரல் புற்றுநோய் உண்டாகுமாம். இனி நாள் ஒன்றுக்கு 25 சதவீதம் 25 ஆண்டுகள் குடிக்கிற வனுக்கு குடியாதவனைக் காட்டிலும் 22 மடங்கு நோய் உண்டாகுமாம். நாள் 10 சிகரெட்டுகளை 25 வருடம் குடிக் கிறவன் குடியாதவனைக் காட்டிலும் 11 மடங்கு நோய் உண்டாகுமாம். இந்தக் கணக்கைச் சோதித்தால் புகை குடிப்பதன் விளைவு நன்றாக புலப்படும் அல்லவா ?

மூர்த்தி நாயனாரைத் துன்புறுத்திய வடுகக் கருநாடக மன்னன் திடீரென இறப்பதற்கு இந்தப் புற்றுநோயே காரணமாக இருக்கலாம். சமய ஈடுபாட்டில் இல்லாமல் பல கெட்ட பழக்கங்களைக் கொண்டிருந்தவனாகையால் அவனைக் கொன்ற நோய் இதைப்போன்ற நச்சுப் பொருள்களின் துய்த்தலேயாக இருக்கலாம் அல்லவா? சமய வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் நமது அன்பர்கள் புகைக்குடி போன்ற பழக்கங்களில் ஈடுபடாமல் இருப்பார்களாக !

---

*மொழியும் பண்பும்

புலவர் - முருகவேள், எம்.ஓ.எல்.

“ **மொழி**யும் பண்பும்” ஒரு நாட்டு மக்களின் விழு மிய செல்வங்களாகும். நாட்டிற்கு விழுப்பம் விளைக்கும் அவை இரண்டினையும் உயிரினும் மேம்பட்டனவாக மதித் துப் போற்றுதல் வேண்டும். “ நிலத்திற் பிறந்தமை கால் காட்டும், காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல் ” என் னும் பொய்யாமொழிக் கிணங்க, ஒரு தனி மனிதனின் பண்பினை அவன்றன் வாய்மொழியின் வைத்து நாம் உணர்ந்து கொள்ளுதல் கூடும். அங்ஙனமே, ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டினையும் மனப்பான்மையினையும், அவர் தம் மொழியின் இயல்பும் அமைப்பும் கொண்டு நாம் ஆராய்ந்து கொள்ளலாம். ‘They accorded a warm reception என ஆங்கிலேயர் கூறுதற்கும், ‘ குளிர்மொழி

---

*தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் 73-வது ஆண்டு விழாவில், திரு. “ கோவைகிழார் ” அவர்கள் தலைமையில், பேசிய தனித் தமுவியது.

கள் கூறி வரவேற்றார்' என நாம் தமிழிற் சொல்லுவதற்கும் உள்ள வேறுபாட்டின் காரணத்தினை உணரவல்லார் இவ்வுண்மையை மறுது உடன்படுவர். 'கிழக்கு' 'மேற்கு' 'படுஞாயிறு' என்னும் சொற்களை மலையாளிகள் இன்றும் வழங்கி வருவதொன்றே, மலையாள மக்கள் தமிழ் நாட்டில் இருந்து மேலைக் கடற்கரை போந்து குடியேறியவர்கள் என்பதற்கும், மலையாள மொழி தமிழின் கிளைமொழிதான் என்பதற்கும் போதிய சான்றும் எனப் பேரறிஞர் கால்டுவேலர் அவர்கள் விளக்கி யிருக்கும் செய்தியும், அது போன்ற பிறவும் ஈண்டு உளங்கொளத் தக்கன.

ஒரு மொழியில் வழங்கும் இன்றைய சொற்களில், அதனைப் பேசிய பண்டைய மக்களின் அரசியல் இனவியல் முதலிய செய்திகளை உணர்த்தும் சான்றுகள், கல் மாறிகள் (Fossils) போல அமைந்து கிடந்து நிழலாடுகின்றன. ஒவ்வொரு நாட்டு மக்களின் அக வாழ்க்கையும், அவரவர் மொழிகளிற் படிந்து, எதிர்கால மக்களுக்குத் தன்னை அறிவுறுத்தி நிற்கின்றது. மொழியானது மக்களின் உள்ளுணர்ச்சிகளை வெளியிட்டுணர்த்தும் வாயிலே யாகலின், அஃது அவ்வுள்ளுணர்ச்சிகள் தோன்றுதற்குக் காரணமாய அம்மக்களது அறிவின் பெற்றியினைச் செவ்விதிற் புலப்படுத்தவல்லதாகும். அவ்வம் மக்களின் அறிவிற்கும் பண்பிற்கும் ஏற்பவே, அவர்கள் வழங்கும் மொழியின் அமைப்பும் பண்பும் உருப்பெறுகின்றன. எனவே, ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய பண்புகள் சில இருத்தல்போல, ஒவ்வொரு மொழிக்கும் உரிய பண்புகள் சில உளவாதல் பெறப்படும்

1 "சொற்களின் குடியரசில், பன்மனைவியர் மணமோபலகணவர் மணமோ இல்லை. அங்கே ஒரு சொல்லுக்கு ஒரு பொருள், ஒரு பொருளுக்கு ஒரு சொல் என்பதுதான், கடுமையான மீறமுடியாத சட்டமாகும்."

---

1. "In the commonwealth of words, there is neither polygamy nor polyandry. One word one meaning, one meaning one word, is the rigid and inviolable law. It follows that there are no synonyms, no real synonyms, only rough approximations"—P. B. Ballard.

[2]"சமய வரலாறுனது, ஒரு கடவுள் நம்பிக்கையி னின்று பல கடவுளர் நம்பிக்கைக்குச் செல்லாமல், பல கடவுளர் கொள்கையிலிருந்து ஒரு கடவுட் கொள்கைக்கே உலகம் முழுதும் சென்றிருத்தலைப்போல—மொழிகளும் முதலில் நீண்ட பல அசைச்சொற்களால் இயன்று, பின் னர்க் குறுகிய ஓரசைச் சொற்களாக அமைந்து நடை பெற்று வருகின்றன."

[3]"மொழிகள் அழுக்கா றுடையன. அவைகள், தம் மின் முரணியதோர் அயல்மொழியைச் சார்ந்த தரகரைக் கொண்டு முயலுபவர்க்குத் தமது அறிவுக் களஞ்சியத் தினைக் காட்டுவதில்லை. நாம் அவற்றோடு தனித்த நிலையிற் காதல் புரிதல் வேண்டும்; அவைகள் விரும்பி மகிழுமாறு பணிவிடைகள் செய்து, அணுக்கத்தொண்டு ஆற்றுதல் வேண்டும். ஒரு மொழியின் கவிதைகள், அங்காடிச் சரக்கு களைப்போலக் கைம்மாறக் கூடியன அல்ல. எத்துணைதான் முயற்சித்திறம் மிக்க - மகிழத்தக்க சார்புரையாளராய் இருப்பினும், அவரது துணைகொண்டு வழக்காடி முயன்று, நாம் நமது காதலியின் புன்முறுவலையும் கடைக்கண் நோக் கினையும் செயற்கை முறைகளிற் பெறமுடியாது."

என்றிங்ஙனம் வரூஉம் அறிஞர்களின் கூற்றுக்கள் பலவற்றைத் தொகுத்துக் காணின், மொழிகட்கும் நம்ம

---

2. "Language proceeds from original polysyllabism towards monosyllabism, just as the history of religion does not pass from the belief in one God to the belief in many gods, but universally from polytheism towards monotheism......"—Otto Jespersen.

3. "Languages are jealous. They do not give up their treasures to those who try to deal with them through an intermediary belonging to an alien rival. We have to Court them in person and dance in attendance on them. Poems are not like market commodities transferable. We cannot receive the smile sand glances of our sweetheart, through an attorney, however diligent and delightful he may be"—Rabindranath Tagore.

ஞோர்போலச் சில சில பண்புகள் உண்டென்ப துணரப் படும். ஐந்தாம் சார்லஸ் என்னும் பேரரசர், [4]" யான் எனது குதிரைகளிடம் ஜெர்மன் மொழியையும், கடவுளிடம் ஸ்பானிஷ் மொழியையும், நண்பர்களிடம் பிரெஞ்சு மொழியையும், காதலியரிடம் இத்தாலிய மொழியையும் பேசுவேன் " எனக் குறிப்பிட்டதாகக் கூறப்படும் செய்தியானது, ஒவ்வொரு மொழிக்கும் உரிய தனித்தனிப் பண்பு ஒன்றுண்டு என்னும் கருத்தைப் பெரிதும் அரண் செய்வதாகும்.

பிரெஞ்சுக்காரராகிய ஜே. வென்ட்ரியே என்னும் மொழிநூலறிஞர், [5]" ஆங்கில மொழியின் சொற்கோவையானது பிரெஞ்சு மொழியைப் போலன்றிச் சமயச் சார்புடைய பொருள்களுக்கும் சான்றோர்களுக்கும் ஐயத்திற்கிடனின்றிப் பெருமதிப்பைக் காட்டுவதாய்ச் சிறந்து விளங்குகின்றது...பிரெஞ்சுக்காரர்கள் பெண்பாலாரோடு தொடர்புடைய சொற்களில், தகவற்ற அல்லது இழிந்த எண்ணங்களைத் தயக்கமின்றி விரைந்து இணைத்துக்காணமுற்படுகின்றனர்..." என ஆராய்ந்து கூறியிருத்தலும் ஈண்டு நாம் கருதுதற்குரியது. மேலும், அவ்வறிஞர் விளக்கிக் காட்டி இருத்தல்போல், தந்தை எனப் பொருள்படும். Papa, Abba என்னும் சொற்களினின்றே Pope, Abbot, Abbey முதலிய சொற்கள் தோன்றின. Gospel என்பது God+spell என்னும் இரு சொற்களின் புணர்ப்பே. ஆங்கில மக்கள் பலர் தமது பேச்சினிடையே பொருட்டெளிவின்றி அடிக்கடி வழங்கும் Bloody என்னும் சொல்லானது, மரியம்மையை நினைவுறுத்தும் By our Lady என்னும் சொற்

---

4. " There seems to be a germ of truth in the well-known saying of the Emperor Charles V, that he would use German to his horses, Spanish to his God, French to his friends and Italian to his mistresses"—Taraporewalla.

5. "Thus, the English vocabulary would doubtless reveal a greater respect for religious things and persons consecreted to, than the French...On the other hand, the Frenchman readily attaches indecent or obscene ideas to words relating to the fair sex."—J. Vendryes.

ருடரின் மரூஉவேயாம். இருவர் தம்முட் பிரிவதற்கு விடைபெறுங்காற் கூறிக்கொள்ளும் Good-bye என்பது, "கடவுள் நின்னோடு துணையாக இருப்பாராக" எனப் பொருள்தரும் God be with you என்பதன் சிதைவே யாகும். Adieu என்னும் பிரிவிடைக் கூற்றும் இக்குறிப் பினதே என்பர். Farewell என்பதும் "செல்லும் நெறி யனைத்தும் சேமநெறியாக!" என்றாற் போல்வதொரு வாழ்த்துதலே. மக்கட் சூழலில் இடையீடின்றி அவ்வப் போது வழங்கப்பெறும் இச்சொற்களில் சமய உணர்வு ததும்பி நிற்றல் தெளிவு.

இன்னோன்ன செய்திகளால், ஆங்கில மொழியின் சொற்கோவையானது சமயப் பொருள்களுக்கும் சான் றோர்களுக்கும் பெருமதிப்புக் காட்டும் பெற்றிமை வாய்ந் தது என்னும் உண்மை வலிவுறுகின்றதன்றோ?

இங்ஙனமே, தமிழிலுள்ள சொற்களுட் சிலவற்றை ஆராய்ந்தாலும், "ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" எனச் சேக்கிழார் பெருமான் சிறந்தெடுத்துப் புகழ்ந்தமைக்குரிய பெருந் தகுதியினை, அது பெற்றிருத்தல் தெளியலாம். கடவுள் - இறைவன் - இயவுள் - கந்தழி - உலகு - உடல் - உயிர் - உண்மை - வாய்மை - மெய்ம்மை - தவம் - ஒழுக்கம் - கற்பு முதலிய சொற்களில் செறிந்துள்ள நிட்பநுட்பம் சான்ற அரும்பெருங் கருத்துக்கள்தாமே, பழந்தமிழ் மக்களின் அறிவறிந்த பண்பினையும் உயர்வற உயர்ந்த நாகரிகச் சிறப்பினையும் உள்ளவாறு உணர்தற்குப் போதிய சான்றுகளாகும். பழந்தமிழர்களிடையே வழங்கி வந்த சொற்களைச் சான்றுகளாகக் கொண்டே, கால்டு வேலர் அவர்கள், ஆரியர்க்கு முற்பட்ட தமிழர் நாகரிகச் சிறப்பினைத் தமது ஒப்பிலக்கண நூலில் விரிவாக விளக்கிக் காட்டுகின்றார். இம்மட்டோ! எழுத்துக்களுக்கு உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய்யெழுத்து எனப் பெயர் கள் அமைத்து வழங்கியதும்; சொற்களைச் சொல் நோக் காது பொருள் நோக்கி உயர்திணை அஃறிணை, ஆண்பால் பெண்பால் என பாகுபாடு செய்ததும்; உலகில் வேறு பிற எம்மொழிகளிலும் காணப்படாத வகையில், எழுத்தும் சொல்லும் மட்டுமே யன்றி, அவற்றால் உணரப்படும் "தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்" எனப் புகழ்ந்

தோதுதற் கேதுவாய பொருளிலக்கணத்தையும் புரையற முழுதும் எடுத்து வகுத்துணர்த்தி, மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளைத் தெளிவுறுத்தி இருப்பதும் பிறவும், செந்தமிழ் மொழிக்கே, யுரிய சீரிய சிறப்பியல்புகளாக அறிஞர்கள் அனைவரும் ஒருமுகமாகப் புகழ்ந்து போற்றி யிருத்தலும் நமக்குப் பெருமிதம் விளைவிப்பதாகும். மேலும் ஈண்டு நாம் உணர்ந்து கருத்தில் இருத்தற்பாலது ஒன்றுண்டு !

"Those who have seen Him, have not spoken ;
Those who speak, have not His token."

என்பதற்கு ஏற்ப, இறைவனைக் "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்பது ஒருவகையில் உண்மையாகக் கூடுமாயினும், "தமிழர்களுட் சான்றோர்கள் பலர் இறைவனைக் கண்டனர்! கண்டது மட்டுமேயன்றி அவனருள் நுகர்வை விண்டனர் !" என நாம் கூறி மகிழும் வண்ணம், நம் அருமைத் தமிழ்மொழியில்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆயிரக்கணக்கான பாடல்களில் இறையருளின்ப அனுபவ நலத்தினை யாவரும் இனிதுணர் விளக்கிப் பாடியிருக்கின்றனர். தமிழ்மொழியின் சிறப்பியற் பண்புகளில் இதுவும் ஒன்றாகும்.

தமிழின் இத்தகைய தனிப்பெருஞ் சிறப்பியல்புகளைத் தகவுற உணர்ந்தே பேரறிஞர் ஒருவர், [6]"சட்டத்திற்கு இலத்தீனும், சால்பறத்திற்கு ஈபுருவும். மெய்ப்பொருளியல் ஆராய்ச்சிக்கு வடமொழியும், அறிவியலுக்கு ஆங்கிலம் பிரெஞ்சு செர்மன் மொழிகளும் போல, இறையருளின்ப நுகர்வின் கவிதைகளுக்குத் தமிழ்மொழி சிறப்பு வாய்ந்ததாகும்" எனப் போற்றிப் புகழ்ந்தார். நடுவுநிலை நெறிப் பேருளாளராகிய அருட்டிரு. இராமலிங்க அடிகளார், "இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும்,

6. "If Latin is the language of law, Hebrew the language of ethical religion, Sanskrit the language of philosophy, English French and German the languages of science, Tamil is the language of the poetry of Divine experience."—Prof. T. P. Meenakshisundaranar.

பெரு மறைப்பையும், போதுபோக்கையும் உண்டுபண்ணு கின்ற ஆரியம் முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல வொட்டாது, பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் லேசுடை யதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடைய தாய், சாகாக் கல்வியை லேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழியாற் பலவகைத் தோத் திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்" என இறைவன் தமக்குச் செய்த பேருதவியை நினைந்து வழுத்துதலும் அறிந் தின் புறற்பாலது. தமிழ்மொழியானது தன்னைக் கற்றுணர் வோர்க்குச் சிறந்த பல பண்புகளை விளைத்தருளுகின்றது என்னும் உண்மை, "அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறி தல்" எனவரும் மோசிகீரனர் (50) புறநானூற்றுப் பாடலா லும், "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்" எனப் பாடிய காரைக்காலம்மையார் திருமொழியாலும் விளங்கும். ஆங்கி லேய மக்கள் தம்முடைய மொழியைச் செகப்பிரியரும் மில்ட்டனும் பேசியமொழி என்றும், விவிலிய நூலைப் பெற் றுள்ள மொழி என்றும் போற்றிப் பெருமிதங் கொள்கின் றனர்; நாமும் நம்முடைய அருமைத் தமிழ் மொழியைத் தொல்காப்பியரும் திருவள்ளுவரும் சங்கப் புலவர்களும் சமயச் சான்றோர்களும் வழங்கிய மொழி என்றும், தொல் காப்பியம், திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், சிவ ஞானபோதம் முதலிய அருட்பெரு நூல்களைப் பெற்றுள்ள மொழி என்றும் எண்ணி எண்ணி இன்புற்றுப் பெருமிதம் எய்தலாம். எனவே, இதுகாறும் கூறியவாற்றால், தமிழ் மொழியின் அறிவு நலமும் அதன் பயனாக விளையும் சைவ சமயப் பண்பு நலமும், தமக்குள் ஒன்றினொன்று பிரிவற விரவி மிக நெருங்கிய தொடர்புடையவாதல் நுண்ணுணர் வினர்க்குப் புலனாகாமற் போகாது. சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக!

மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு!
இழிவின் றவையுயர்ந்த வேனும்,—விழுமியநம்
செந்தமிழ்போல் தெய்வத் திறம்சிறந்த சீர்த்தி,மற்றை
எந்த மொழிக்குமில்லை ஈண்டு! (1)

சட்டத்தில் லத்தீனம் ; சால்பறத்தில் ஈபுருவம் ;
தட்பமிகு மெய்யுணர்வில் சம்ஸ்கிருதம் ;—நுட்பமிக
ஆன்ற அறிவியலில் ஆங்கிலம்சேர் ஃப்ரெஞ்ச்போல்,
சான்றநிறை மாண்பில் தமிழ். (2)

நம்மருமைச் செந்தமிழின் நல்லமைப்பை ஆராய்ந்தால்,
செம்மைமிகு சீர்ச்சைவ சித்தாந்த—மெய்ம்மைகள்தாம்
எல்லாம் பொதிந்தொளிர்தல், யாரும் இனிதுணர்ந்து
நல்லோராய் வாழ்வர் நயந்து! (3)

ஞானச் செய்தி

[K. இராமநாதன் செட்டியார்]

(மலர்-30 ; இதழ் - 6 ; 184-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவின் முறைகள் : கல்வித்தாய் கட்டழகி. அவளை போல் கல்வியும் செவிக்கினியது ; வாய்க்கினியது ; கருத்திற்கினியது. கற்றோர்க்கு அழகு தருவது. ஆயுந்தொறுந் தொறுங் கல்வி இன்பந்தரும். ஆய்ந்துகொண்டே போகலாம். படிப்பில் கவனஞ் செலுத்துகிறவர்கட்குப் பிற விஷயங்களில் கவனஞ் செலுத்த முடிவதில்லை. ஆயினும் ஒரு வாழ்க்கையில் கற்க முடிந்தது கைம்மண்ணளவு கூட இல்லை. ஒரு விஷயத்தையேனும் முழுதும் உணர முடியவில்லை. ஆடு தழை தின்றாற்போல் அதில் சிறிது இதில் சிறிது கற்கிறோம். கற்குஞ் சிறு பாகத்தையும் ஐயமறத் திரிபின்றிக் கற்பது அருமை. அவ்வாறு கற்றாலும் ஒருதெளிவு, ஒரு திட்டம் ஏற்படுதல் அருமை. கற்கக் கற்க அறியாமையின் விலாசமே பெருகிக்கொண்டு போகிறது.

ஞானம் : அறிவைக் கொண்டே அருள் என்று ஒன்று உண்டு எனத் தெரிந்துகொள்ளவேண்டும். அறிவுத் தாயே அருள் தாயை யடைய வழிகாட்டுகிறாள். எவ்வளவு சாத்திரங்கள் படித்தாலும், கடவுளை அடைந்துவிட முடியாது. அனுபவமும் அவனருளும் வேண்டும். வேதாகமப் படிப்-

பெல்லாம், அபரஞானப் படிப்பென்பார்கள். பரஞானம் கடவுளை உணர்தல். பஞ்சாங்கத்தில் ஒரு வருடம் அதிக மழை பெய்யுமெனக் குறித்திருந்தது.

ஆயினும், பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிந்தாலும் ஒரு சொட்டுத் தண்ணீர் காண முடியாதென்று உணரவேண்டும். ஆகையால், படிப்பால் தெரிந்துகொள்வது ஒருவிதம். அனுபவத்தால் தெரிந்துகொள்வது ஒரு விதம். இதனை அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் பாயிரச் செய்யுளொன்றில் நன்கு விளக்குகிறார்கள். ஆகமத்தேயறியலாம்: 'அளவினாலும் தெருளலாம்' 'ஞானச் செய்தியால் சிந்தையுள்ளே மருளெலாம் நீங்கக் கண்டு வாழலாம்' 'உபதேசத்தாற் கேட்டறியலாம்' 'அளவையால் (Logic) சிந்தித்து மறியலாம்' 'சிவஞானத்தால் மாசறத் தெளிந்து மறியலாம்.'

இப்பகுதியை சிவஞான பாஷ்யக்காரர் நன்கு விளக்குகிறார்கள். நூல்களும், அளவையும் உண்மை ஞானத்தைத் தோற்றுவிக்கும் முகத்தான் பயன்படும். வேறு பயனில்லை. 'மருளெலா நீங்கச் சிந்தையுள்ளே காண்டல்' ஞானச் செய்தி ஒன்றானன்றி ஏனையவற்றாற் கூடாதென்பதும், அவையெல்லாம் 'அனுபவத்தைத் தோற்றுவித்தன் மாத்திரையாற் பயன்படுதலுடைய வென்பதூஉம் போந்தவாறு காண்க.' ஆகையால் அறிவு அருளையடையத் தூண்டுகிறது.

அருள் தாயை யடைவது சிரமம். பொதுவாகச் சிறந்த பொருள் பெரு முயற்சியால் தான் கிடைக்கும். அருளைப் பெற எவ்வளவு கஷ்டம் எடுத்துக்கொண்டாலும் அது அதிகமல்ல. சிம்மாசனத்தில் இருக்கும் தாய் நம் மனத்தில் குடியேற வேண்டுமானால், அவள் தனித்துச் சிறப்புடன் இருக்கவேண்டும். வேறு விஷயங்களுடன் அவள் குடியிருக்கமாட்டாள். அவள் கற்பிக்கும் விதம் மிக அருமை. ஒருநொடியில் உலகம் முழுவதையும் நம் கருத்தில் வைப்பள். அவளால் நம் அகக் கண்ணுக்கு ஒரு சக்தி பிறந்துவிடும். எல்லா விஷயமும் தெரிந்துவிடும். எல்லாவிடமும் கண் முன்னர் நிற்கும். இதனை 'ஞான நாட்டம்' என்றார் பட்டணத்தடிகள்.

ஞானச் செய்தி என்றால் என்ன? மனிதன் உடலெடுத்து இயல்பாக வளர்ந்து, அறிவுபெற்று, அருட்

செல்வியை வேண்ட அவள் காதில் சொல்லும் செய்தியைக் கேட்டறியலாம். அகக் கண்ணல் பார்த்தறியலாம். இதை உள்ளொளி யென்றும் பேரொளி என்றும் கூறலாம். இது கருவி கரணங்களின்றிக் காணும் தெளிவு. எதைக் கேட்டால், பின்னர் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டியதொன் றில்லையோ அதுதான் ஞானச்செய்தி. எதைப் பார்த்தபின் வேறொன்றைப் பார்க்கவேண்டியதில்லையோ அது ஞானச் செய்தி.

ஞானத்தின் நிறைவு: முன்னொரு காலத்தில் உத்தாலகர் என்றொருவர் இருந்தார். அவருக்கு ஒரு பிள்ளை. அப் பிள்ளை யின் பெயர் சுவேதகேது. அப்பையனுக்குத் தக்க வயது வந்ததும் தகப்பனர் அவனைக் கூப்பிட்டு 'சுவேதகேது' நீவேதம் படிக்கவேண்டும். ஒரு குருகுலத்தில் சேரவேண்டும். நம் சொந்தக்காரர்களில் வேதம் படிக்காதவர்கள் ஒருவரும் இல்லை. படிப்பில்லாமல் பிறப்பினல் மட்டும் பிராமணர் ஆகிவிடலா மென்று நம்மவர் கருதுவதில்லை. ஆகையால் நீ உன் படிப்பை ஆரம்பம் செய்' என்று சொன்னர். பையனும் ஒரு சற்குருவை நாடி, பன்னிரண்டு வருடம் பிரமச்சரிய விரதம் பூண்டு, கருத்தோடு நன்கு பயின்று, நிரம்பத் தேர்ச்சி பெற்று வீடு திரும்பினன். அப்பொழுது சுவேதகேதுவுக்கு வயது 24. எல்லா வேதங்களையும் படித்துவிட்டோமென்று சந்தோஷம். நன்கு படித்து விட்டோமென்ற எண்ணத்தால் ஒரு கர்வம் உதித்து வளர்ந்தது. இதனைத் தகப்பனர் உணர்ந்தார். அவனைத் திருத்த வேண்டுமென்ற எண்ணங்கொண்டு, பையனைக் கூப்பிட்டுச் சொல்லுகிறர்: சுவேதகேது, கேட்க முடியாததைக் கேட்கவும், உணர முடியாததை உணரவும், அறியமுடியாததை அறியவும் செய்யும் வித்தையைக் கற்று வந்தனையா? அதுவே வித்தைக்கு வித்தை. பையன் சொல்லுகிறன்: ' அப்பா, அவ்வாறு ஒரு வித்தையிருப்பதாக நானறியேன். என் ஆசிரியரும் சொல்லித்தரவில்லை. அவருக்குத் தெரியுமோ தெரியாதோ அதுவுமறியேன் '' இவ்வரலாறு சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது.

சுவேதகேது கேளாது வந்த வித்தை ஞானச் செய்தி.

மூன்று சக்திகள்: உயிர்கள் உயர்ந்த நிலையடைய மூன்று சக்திகள் உதவுகின்றன. அவைகளை இயல்புச் சக்தி,

அறிவுச் சக்தி, அருட் சக்தி என்று கூறலாம். அருட் சக்தி எனினும் ஞான சக்தி எனினுய் ஒன்றே. இயல்புச் சக்தியை ஆங்கிலத்தில் Instinct அல்லது unconscious state அல்லது Sub-Conscious state என்பர். அறிவுச் சக்தியை Intellegince அல்லது Reason அல்லது Conscious state என்பர். அருட்சக்தியை Intuition அல்லது Super-Conscious state என்பர். இம்மூன்று சக்திகளும் முறையே செய்ய எண்ண உணர உதவுகின்றன. எண்ணுதலை அறிதல் என்று கூறலாம். உணருதலைக் காண்டல் என்றும், தெளிதல் என்றும் கூறலாம் 'மருளெலாம் நீங்கச் சிந்தையுள்ளே காண்டல்' தான் உணருதல், இச் செய்கைகள் முறையே உடலிலும் மனத்திலும், உள்ளத்திலும் நடைபெறுகின்றன. இயல்புச் சக்தி மட்டுமிருந்தால் மிருகம். அறிவுச்சக்தி நிறைந்திருந்தால் மனிதன். அருட்சக்தியுமிருந்தால் அவன் தெய்வ அம்சமுள்ள மனிதன் அல்லது தேவன். ஒருவன் குழந்தைப் பருவத்தில் இயல்புச் சக்தியைக் காண்கிறோம். வயது வந்ததும் அறிவடையலாம். பின்னர் அவ்வறிவு நன்கு உபயோகப்பட்டால் அருட்சக்தியை எதிர்பார்க்கலாம்.

பெயர்	Name	காரியம்	காரியத்தின் இடம்	உதாரணம்	
இயல்புச்சக்தி	Instinct (unconscious)	செய்தல்	உடல்	மிருகம்	குழந்தை
அறிவுச் சக்தி	Intelligence Reason conscious	எண்ணுதல்	மனம்	மனிதன்	காளைப் பருவம்
அருட் சக்தி (ஞான சக்தி)	Intiution Super-conscious	உணர்தல்	உள்ளம்	தேவன்	முதுமை

இம் மூன்று சக்திக்கும் விரோதமில்லை. ஒன்றன்பின் ஒன்ருக நம்மை வந்தடையும். ஒன்றுபின் வருவதற்கு வழி காட்டும். ஆகையால் மூன்றும் ஒத்திருக்கும். ஒன்று வந்ததும் மற்ருென்று ஓடிவிடாது. ஆகையால் அறிவுக்கு முரணுக ஞானச் செய்திகளை நம்பலாகாது.

முதல் நிலையும் கடைசி நிலையும் அநேக விஷயங்களில் ஒத்திருப்பதுபோல் தோன்றும். அறிவு நிலையில் ஆணவம் கூத்தாடும். ஆணவம் செயற்படுங்காலம் அதற்கு முன்னர் உயிரை மறைத்துக்கொண்டு கிடக்கிறது. பின்னர் அடங்கிக் கிடக்கிறது. அறிவு நிலையில் சுயேச்சையுண்டு. நல்லதும் அல்லதும் நாம் செய்வோம். நாம் ஆராய்வோம். தீர்மானிப்போம். அதற்கு முன்னர் நாம் அறியாமையால் கட்டுண்ட காலம். பின்னர் இறைவனுல் ஆட்டுவிக்கப்படுங் காலம். அறிவுநிலையில் பலவித கவலைகள் உண்டு. அதற்கு முன்னர் கவலை தோன்ருக் காலம், பின்னர் கவலை யறுந்த காலம்.

பயன்: ஞானச் செய்தி பெறுவதால் பயன் மிக அதிகம். ஞானச்செய்தி பெறும்போது மனிதன் தனித்து நிற்கிருன். அது பெற்ற அவனுக்கு மட்டும் தெரியும். சில சமயங்களில் அவனுக்கும் சந்தேகம் தோன்றும். அவ்வாறிருக்கும்போது அவனை எப்படித் தெரிந்துகொள்ளமுடியுமென்று எண்ணலாம். அந்த உயர்நிலை அடைந்தவர்களைச் சில அடையாளங்களால் அறியலாம். அவ்வடையாளங்களை டாக்டர் ரிச்சார்டு - மாரிஸ் பக் (Dr. Richard Maurice Bucke) என்பவர் அண்ட உணர்ச்சி (Cosmic Consciousness) என்ற நூலில் விவரித்து உதாரணங்களுடன் கூறுகிருர். அவைகளைத் தொகுத்துப் பார்ப்போம்.

1. ஞானச்செய்தி கிடைக்கும்போது, திடீரென்று ஒருவித உணர்ச்சி தோன்றுகிறது. கடலில் மூழ்குவது போல் தோன்றலாம். மேகத்தில் மறைவதுபோல் தோன்றலாம். இன்னும் பலவிதமாகத் தோற்றங்கள் ஏற்படலாம்.

2. அளவிலா ஆனந்தம் உண்டாகிறது. ஒரு பெருமிதம், ஒருவெற்றி தோன்றுகிறது.

3. அறிவு பிரகாசிக்கிறது. யாவும் விளங்கித் தோன்றும். உலகத்தின் பொருளும் போக்கும் நன்கு புலப்படும்.

4. வாழ்க்கையில் ஒழுக்கமும், உயர்ந்த எண்ணங்களும் படிகிறது.

5. என்றும் அழியோம் என்ற எண்ணம் உண்டாகிறது. 'Immortality' 'என்றும் இருப்பவர்' என்ற எண்ணமே நிலவும்.

6. எமபயம் மறைந்துவிடுகிறது.

7. யான் பாவி என்ற எண்ணம் இருப்பதில்லை.

8. வாழ்க்கையில் மாற்றம் திடீரென்று வருகிறது.

9. முகத்திலும் உடலிலும் ஒரு பிரகாசம் ஏற்படுகிறது.

முயற்சி : இவ்வளவு பயன்தரும் ஞானச்செய்தியைப் பெற அதற்குத் தகுந்த பெரும் முயற்சி வேண்டும். உயர்ந்த பொருள் முயற்சியில்லாது கிட்டுவது அருமை. உண்மையான முயற்சி உடையார்க்கே இறைவன் அருள் புரிகிறான். இதனை விளக்கக் கிறிஸ்துநாதர் ஒரு அழகிய கதை சொல்லுகிறார்.

ஒரு முனிவர் மூன்று பேரைக் கூப்பிட்டார். அவர்கள் தகுதிக்குத் தகுந்த பணத்தைக் கொடுத்தார். ஒருவனிடம் ஐந்து பணமும், ஒருவனிடம் இரண்டு பணமும், ஒருவனிடம் ஒரு பணமுங் கொடுத்தார். பின்னர் அவர் தன் வழியே சென்றார். ஐந்து பணம் கொண்டவன் அதன் உதவியால் பல பொருள் கொண்டும் கொடுத்தும் வியாபாரஞ் செய்தான். அவ் வியாபாரத்தால் ஐந்து பணத்தைப் பத்துப் பணமாக்கினான். இரண்டு பணம் பெற்றவன் அம் மாதிரியே அதனை நான்கு பணமாக்கினான். ஒரு பணம் பெற்றவன் குழிதோண்டி மண்ணுக்குள் அப்பணத்தைப் பத்திரமாகப் புதைத்து வைத்தான். சில காலஞ்சென்ற பின் அம்முனிவர் அங்குவந்து அம்மூவரையும் கணக்குக் கேட்டார். ஐந்து பணம் பெற்றவன் அவர் கொடுத்த ஐந்து பணத்தையும் அவன் அதனால் சம்பாதித்த ஐந்து பணத்தையும் அவர் முன்னர் வைத்து நடந்ததைத் தெரிவித்தான். முனிவர் சந்தோஷப்பட்டு அப்பணங்களைத் திருப்பிக் கொடுத்து நன்கு செய்தாய். கொடுத்ததைப் போற்றினாய். வளர்த்தாய். ஆகையால் இன்னும் பல பொருள் உனக்குக் கொடுப்பேன். அத்துடன் அளவிலா

ஆனந்தத்தையுங் கொடுப்பேன்' என்றார். அவ்வாறே இரண்டு பணம் பெற்றவனும் கணக்கு ஒப்புவித்து நல்ல செல்வம் பெற்றான். புதைத்து வைத்தவன் வந்து சொல்லுகிறான். "ஏ பிரபு. உங்கள் பணத்தைக் கெடுக்கவில்லை. நான் வெகு பத்திரமாக வைத்திருக்கிறேன். தொலைத்துவிட்டால் நீங்கள் கோபங் கொள்வீர்களென்று நன்கு தெரியும். நீங்களோ, வித்தின்றியே விளைவு செய்வீர். போரடிக்காமல் நெல்கொண்டு வருவீர். அத்தகைய உமக்கா நான் பணத்தைப் பெருக்குவது ?' என்ன பதில் சொன்னார் முனிவர் ? " ஏ பொல்லா மகனே, சோம்பேறிப் பயலே, நீ செய்தது தவறு " என்று கோபித்து அவனிடமிருந்த பணத்தையும் வாங்கிப் பத்துப்பணம் வைத்திருப்பவனிடங் கொடுத்தார்.

இக் கதை எவ்வளவு அழகியது. உடலெடுக்கும் போதே இயற்கைத் தன்மை இறைவன் தந்து விடுகிறான். பின்னர் தகுதிக் கேற்ப அறிவைக் கொடுக்கிறான். அதனை வளர்க்கச் சொல்லுகிறான். நன்கு வளர்த்தவர்களுக்குக் கடைசியில் ஞானத்தை அருளுகிறான். கொடுத்த அறிவை உபயோகப்படுத்தவில்லையானால் கோபித்துக் கொள்ளுகிறான். தன் முயற்சி இல்லாதாருக்கு அவனருள் கிடைப்பது அரிது. அடியார் அவனை நோக்கி ஒரு அடி நடந்தால், அவன் பல படிகள் கீழிறங்கி எதிர் கொண்டழைக்கிறான்.

ஆகையால் ஞானச்செய்தி, பெற முயற்சியும் வேண்டும் ஆண்டவன் அருளும் வேண்டும். நாற்று நடுவது நம் வேலை. களை பிடுங்குவது நம் வேலை. தண்ணீர் ஊற்றுவது நம் வேலை. வேலிகட்டுவது நம்வேலை. ஆனால் அதற்கு விதை தருவது எம்பெருமான் வேலை. அச்செடியின் மலரை விரிய வைப்பது அவன் வேலை. நம் கைபட்டால் கெட்டுவிடும். ஆகையால் வேண்டிய முயற்சி செய்தால் அவனருளால் ஞானச் செய்தி பெறுவது திண்ணம்.

பிரானருள் உண்டெனில் உண்டு நற்செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டு நன்ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு
பிரானருளிற் பெருந் தெய்வமும் ஆமே. (திருமூலர் 1645)

புண்ணியன் எந்தை புனிதன் இணையடி
நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது

மண்ணவ ராவதும் வானவ ராவதும்
அண்ணல் இறைவன் அருள் பெற்ற போதே. (திருமூலர்-1650)

காயத் தேரேறி மனப்பாகன் கைகூட்ட
மாயத் தேரேறி மயங்கு மவையுணர்
நேயத் தேரேறி நிமலன் அருள் பெற்றால்
ஆயத் தேரேறி யவனிவ னாமே. (திருமூலர்-1651)

திருமுருகாற்றுப்படை சைவ சித்தாந்த விளக்கமே

வித்துவான் - செ. வேங்கடராமச் செட்டியார்

(மலர்-30 ; இதழ்-6 ; 177-ம் பக்கத் தொடர்ச்சி)

11. திருவேரகம்

முருகன் திருவேரகத்தில் அந்தணர் மலர்தூவி மந்திர மோதி வழிபடத் தங்குதற்குரியவன் என்பதை விளக்கு கின்றார்.

திருவேரகத்துள்ள முருகனை வழிபடத் தூய்மையான ஒரு குழுவினர் வருகின்றனர். அவர்கள் மார்பில் பூணூல் காட்சியளிக்கின்றது ; ஒன்பது இழைகளைக் கொண்டு செய்த மூன்று புரிகளை யுடையதாக அது காணப்படுகின்றது. அந்தப் பூணூலையும் உடம்பின் தோற்றத்தையும் காணும்போதே அவர்கள் அந்தணர்கள் ; மறையில் கூறிய முறைப்படி நாற்பத்தெட்டு இளமை நல்யாண்டுகள் வரை பிரமசரியம் மேற்கொண்டு காத்தவர்கள் ; அறத்தைப் பயின்ற கொள்கையை யுடையவர்கள் ; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறு தொழிலையும் வழுவாது செய்பவர்கள் ; பலவகையாக வேறுபட்ட குடிகளில் உலகத்தார் நன்கு மதிக்கும் உயர் குடிப் பிறந்த தாய்தந்தையர்களைக் கொண்டவர்கள் ; மூன்று வகையான வடிவமைத்து வளர்க்கப்படும் ஆகவ னீயம், காருகபத்தியம், தென்திசையங்கி ஆகிய மூன்று

தீயினையும் செல்வமாகப் பெற்றவர்கள் — போற்றுகின்றவர்கள்; என்பன யாவும் நன்கு விளங்கிவிடுகின்றன.

அவர்கள் ஒவ்வொருவரும் ஈரம் புலராத உடையை உலர உடுத்துக்கொண்டுள்ளனர்; இதனால் அவர்கள், நீராடி நனைந்த ஆடையோடு அப்படியே வருகின்றனர் என்பது விளங்குகின்றது. அவர்கள் கைகள் தலைமேல் குவிந்து காணப்படுகின்றன. அவர்கள் நாக்கு வாய்க்குள் அசைந்துகொண்டிருக்கின்றது; அதனால் ஏதோ சொல்லுகின்றார்கள் என்பதை யறியலாம். ஆனால் ஒலியெழவில்லை. பிறர் கேளாதபடி ஆறெழுத்தாலாகிய மந்திரம் உச்சரித்துக்கொண்டு மணமிக்க மலர்களை ஏந்திக்கொண்டு முருகனை அருச்சிக்கும் காலமறிந்து அருச்சிக்கின்றார்கள். அந்தணர்கள் இவ்வாறு அருச்சிக்க அதற்குப் பெரிது மகிழ்ந்து 'ஏரகம்' என்னும் தலத்தில் இருத்தற்கும் உரியவன்; என்று புலவர் கூறுகின்றார்.

இங்கு அந்தணர்கள், பூணூல் அணிந்து ஞானப் பிறப்பை யுற்றவர்கள்; மறை பயின்றவர்கள்; நாற்பத்தெட்டு யாண்டு பிரமசரியங் காத்தவர்கள்; தீயினை வணங்குபவர்கள்; என்பன அறிகின்றோம். இவ்வளவு தகுதிப்பாடு உடையவர்கள், இறைவனுடைய மூவகை இயல்புகளில் சிறந்ததாய உலகத்தின் வேறாய்த் தானே யாய் நிற்கும் தனிப்பர நிலையைத்தான் வழிபடுவார்கள் என்பதை உறுதியாக நம்பலாம். அவர்கள் வழிபடும் முறையினை நோக்கினும் இது புலப்படும். "உச்சிக் கூப்பிய கையினர்" என்று அவர்கள் உடம்பு வழிபாட்டை விளக்குகின்றார் புலவர். மண் முதலாய தத்துவங்களாலியன்ற உடம்பில் தலையே மேல் நிலையில் உள்ளது. அத் தலைக்கு மேல் கைகுவித்து வழிபடுகின்றார்கள். இச்செயலை நோக்கின், தத்துவங் கடந்து தானேயாய் நிற்கும் பரநிலையினைக் கருதி வழிபடுகின்றார்கள் என்பது தெற்றெனப் புலப்படும்.

இனி,மொழிவழிபாடாகிய மந்திரம் கூறும்பொழுதும் பிறர் அறிய வியலாதபடி உச்சரித்தனர் என்பதை அறிகின்றோம். பிறர் அறிய உச்சரித்தால் ஓசையெழும்; அவ்வோசை ஐம்பெரும் பூதங்களில் ஒன்றாய விண்ணிற்குரியதாகும். விண்முதற் பூதங்கட்கு அப்பாற்பட்ட பரநிலையில்

உள்ள ஓசையால் உணர்வார்க்கு உணர்வரிய பரம்பொருளை விண்ணிடமாகப் பிறக்கும் ஓசையை யெழுப்பி வழிபடுதல் அமையாதென்று கருதியே அங்ஙனம் உச்சரித்தனர் என்பதை அறியலாம். இனி, மனவழிபாடும் தானேயாய் நிற்கும் பரநிலையினையே குறித்து நிகழ்ந்தது என்பதை யூகித்தறியலாம். புலவர், மன, மொழி, மெய் என்ற முக்கரண வழிபாட்டில் மெய்யினாலாய வழிபாட்டையும் மொழியாலாய வழிபாட்டையும் வெளிப்படையாகக் கூறி, மனவழிபாட்டைக் குறிப்பால்,—"விரையுறு நறுமலரேந்தி" என்பதால் அறிய வைத்துள்ளார். உருவமுடைய மலரில் உள்ள மணம், அம்மலர் முழுதும் பரவி அம்மலரைக் கடந்தும் அருவாய் நிற்றலால் உலகமுழுதும் வியாபித்து உலகைக் கடந்தும் அருவாய் நிற்கும் பரம்பரனுக்குத் தக்க உவமையாதல் கண்ட அந்தணர், தம் கருத்தை அம்மலர்களைக் கொண்டு விளக்கினர்கள். மலரின்மணம் போலப் பற்ற முடியாத நின்பர நிலையையே எம்முள்ளம் நீடுநினைகின்றது என்பதையே முருகன் முன்னிலையில் அம்மலர்களைக் கொண்டு அவர்கள் விளக்கினர்கள். 'நறுமலர்' என்னாது, 'விரையுறு நறுமலர்' என்றதும் அச்சிறப்பைப் புலப்படுத்தவேயாம். பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறியவியலாத தத்துவங்கடந்த பரம்பொருளைக் கூறுமிடத்து, 'நறுமலரெழுதரு நாற்றம்போல் பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்' என மணிவாசகப் பெருமான் விளக்கியிருத்தல் ஈண்டு நினைவு கூர்தற்குரியது. எனவே அந்தணர்கள், மனமொழி மெய்களால் தத்துவங்கடந்து தானேயாய் நிற்கும் தனிப்பர நிலையையே வழிபட்டார்கள் என்பதை நன்குணர்கின்றோம்.

இங்ஙனம் தன் சிறப்பியல்பாகிய தானேயாம் பரநிலையை யுணர்ந்து வழிபடும் அந்தணர் வழிபாட்டின் சிறப்பை நினைந்தே முருகனும் 'பெரிதுவந்து' ஏரகத்துறைவதாகக் கூறுகின்றார் புலவர். 'குன்றுதோறாடல்' என்னும் பகுதியில் இவ்வாறு கூறாது, 'குன்றுதோறாடலும் நின்ற தன்பண்பே' என்றே கூறியொழிதல் காண்க. பரநிலையை விளக்கும் பரங்குன்றத்து இருப்பைக் கூறுங்கால், "குன்றமர்ந்துறைதலும் உரியன்" என அமர்ந்துறைவதாகச் சிறப்பித்ததையும் ஈண்டு நினைக்க.

12. குன்றுதோறாடல்

முருகனைப் பூசிக்கும் பூசாரியாகிய வேலன், முருகனைப் போல வேடந்தாங்கி மகளிரொடு கூடிக் குன்றுகளில் ஆடும் ஆடலும் அம்முருகப் பெருமானுடைய நிலைபெற்ற பண்பாகவே கொள்ளப்படும் என்பதை இப்பகுதியில் விளக்குகின்றார் புலவர். சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் வேட்டுவக் கன்னிப் பெண்ணுக்குக் கொற்றவை வேடம் தரித்து அப்பெண்ணைக் கொற்றவையாகவே கருதி வழிபட்டுள்ள முறையை இங்கு நினைவுகூர்க.

குன்றத்திலுள்ள சிறுகுடியில் பெரிய ஆரவாரம் எழுகின்றது. அது என்ன ஆரவாரம் என்பதை வேலன் நோக்குகின்றான். அது குரவைக் கூத்தின் ஆரவாரம் என்பதை அறிகின்றான். ஆடுகின்றவர்கள், கொடுந்தொழிலையுடைய வில்லினால் கொல்லும் இயல்புடைய குறவர்கள்; அவர்கள் மார்பில் நறுமணமுடைய சந்தனம் பூசிக்கொண்டிருக்கின்றார்கள். அது அழகான நிறத்தோடு எழுச்சிபெற்று விளங்குகின்றது. அவர்கள் ஆடலை நோக்கும்போது அவர்கள் சுற்றத்தோடு சிறந்த மதுமாந்தி ஆடுகின்றார்கள் என்று புலப்படுகின்றது. அந்தக் கள் தானும் நீண்ட மூங்கிற் குழாயில் வைத்துப் புளிப்பேற்றிய தேனால் ஆகிய கள்ளின் தெளிவாக இருக்கவேண்டும் என்பது அவர் மகிழ்ச்சி மிகுதியால் தெரிகின்றது. மலைக்குரிய தொண்டகப் பறை நன்கு முழங்குகின்றது. அம்மகிழ்ச்சியொடு முருகனை வழிபடுமுறையில் ஆடவரும் பெண்டிருமாக அக்குறவர்கள் கைகோத்துக் குரவைக்கூத்து ஆடுகின்றார்கள். இக்குரவைக் கூத்தில் முருகனுக்கு விருப்பம் மிகுதியாகவுண்டு. அவன் மாலைக்குரிய கடவுள் அன்றோ?

இக்குரவைக் கூத்தைக் கண்ட பூசாரியாகிய வேலனுக்குத் தானும் அக்குரவையில் கலந்து அவ்வாறு ஆடவேண்டும் என்ற எண்ணம் எழுகின்றது. ஆனால் அவர்கள்போல் மதுவுண்ட மயக்கத்தால் ஆடவிரும்பவில்லை; முருகன்பால் தனக்குள்ள அன்பெனும் நறவமாந்தித் தெளிந்தாட விரும்பினான். அன்பு மிகுதியால் தன்னை முருகனாகவே கருதிக் கொண்டான். முருகனும் அவன் அன்பைக் கண்டு அவன்மேல் ஆவேசித்தான். வேலன் முருகன்போல் வேடம் புனைகின்றான்.

பச்சிலைக்கொடியையே நாராகக் கொண்டு நறுமணமுடைய சாதிக்காயை இடையிடையே வைத்து ஆழகிய புட்டில் போல் விளங்கும் ஏலக்காயையும் கலந்து காட்டு மல்லிகையோடு வெண்கூதாள மலரையும் வைத்துத் தொடுத்த கண்ணியைத் தலையில் சூடிக் கொள்கின்றான். உடம்பெல்லாம் செந்நிறத்தைப் பூசிக் கொள்கின்றான். சிவந்த ஆடையை உடுத்துக் கொள்கின்றான். சிவந்த அடியையுடைய அசோகத்தளிரைக் காதில் தொங்குமாறு அணிந்துகொள்கின்றான். இடையில் கச்சினைக் கட்டிக் கொள்கின்றான். காலில் கழலை அணிந்து கொள்கின்றான். வெட்சி மாலையைச் சூடிக்கொள்கின்றான். குறும்புள்ளிகளை யுடையதும் நறுமணம் வீசுகின்றதும் மென்மையுடையதுமாய மேலாடையை இடையில் இறுகக் கட்டி இருமுனையும் நிலத்தில் வீழ்ந்து தொங்குமாறு விட்டுக்கொள்கின்றான். குழலை பூதுகின்றான்; ஊதுகொம்பை பூதுகின்றான்; சிறிய பல வாத்தியங்களை எழுப்புகின்றான். ஆட்டுக்கிடாயைப் பின்வரச் செய்கின்றான். மயில்மேல் ஏறுகின்றான் குற்றமற்ற கோழிக் கொடியை யுயர்த்திப் பிடிக்கின்றான். கொடியினைத் தோள்களில் அணிகின்றான். நெடியனாகத் தோற்றமளிக்கின்றான்.

வேலன் இவ்வாறு முருகன் வேடம்பூண்டு நின்ற குறிப்பை யுணர்ந்த சேவிக்கும் மகளிரும் தம்மையலங்கரித்துக்கொண்டு வந்து நிற்கின்றார்கள். அவர்கள் தலையில் அழகான கண்ணி காணப்படுகின்றது. அது, ஆழமான சுனையில் பூத்த மலர்களால் இயன்றது. சுனையில் மலராத முன்னரே கொய்து விரல்களால் வலிய அலர்த்திய மலர்களாலியன்று வேறுபட்ட பலமணம் வீசும் தன்மையது. வண்டுகள் அதில் நீங்காது மொய்த்துக் கொண்டிருக்கின்றன. அக்கண்ணிக்குக் கீழ் இணையாகக் கட்டின மலர் மாலையைச் சுற்றிக் கூந்தல் காணப்படுகின்றது. அவர்கள் இடையில் பெரிய குளிர்ந்த தழையுடை காணப்படுகின்றது. அத்தழையுடை, கஞ்சாத் தழையையும், இலைகளோடு கூடிய ஏனை நறுமணமுடைய மலர்களையும் சேர்த்து அவற்றிற்கு இடையிடையே செவ்விய காம்பினையுடைய கடப்பினது வெண்மையான பூங்கொத்துக்களையும் இட்டு வண்டுகள் தேனுண்ணுமாறு கட்டியதாகும். அத்தகைய

தழையுடைய முத்துவடங்கள் திருத்தமாக அணியப் பெற்ற அவர்கள் மேனியில் கிடந்து அசையுமாறு உடுத்துக்கொண் டார்கள். பல வண்ணங்களையுடைய தழையுடை யுடுத்த அம்மகளிரைக் கண்டால் மயிலைக் கண்டாற்போலவே தோன்றும். அத்தகைய அழகுவாய்ந்த மடநடையுடைய வர்களாய் வந்து நின்ற அம்மகளிரோடு அவ்வேலன் கலந்து கொண்டான்.

இந்நிகழ்ச்சியைக் கண்டு, முருகனைப் பாடிச் சேவிக் கும் மகளிர் வருகின்றனர். அம்மகளிர், யாழ் நரம்பு ஆர வாரித்தாலொத்த இனிய குரலை யுடையவர்களாகக் காணப் படுகின்றார்கள். வேலன், தன்னுடைய ஆடலுக்கு அப் பாடு மகளிரும் வேண்டுமென்று அக்கூட்டத்தாரையும் சேர்த்துக்கொள்கின்றான். முழவு போன்ற தன் பெரிய கைகளால் பொருந்தச் சிலரைத் தேவியர் போல ஏந்திக் கொள்கின்றான். மெல்லிய தோளையுடைய பல மான்பிணை போன்ற மகளிரைத் தழுவி அவர்கட்குத் தலைமையான இடத்தைக் கொடுத்துக் குன்றில் ஆடுகின்றான். ஒவ்வொரு குன்றிலும் இத்தகைய ஆடலுண்டு. இவ்வேலனது ஆட லும் அக்குன்றிற்குரிய முருகனது ஆடற்பண்பே யாகும்; என்கின்றார் புலவர்.

இப்பகுதியில் கூறப்படும் வழிபாடு, இறைவன், கலப் பால் உலகமாம் நிலையை நினைந்து செய்யும் வழிபாடு; என்பது தெளிவு. குன்றுதோறும் ஆடுகின்றவன் முருகன் அல்லன்; முருகன் வேடம் பூண்ட பூசாரியாகிய வேலனே ஆங்காங்கு ஆடுகின்றான். சேவிக்கும் மகளிரும் அவ் வேலனை முருகனாகவே எண்ணுகின்றனர். வேலன், தன்னை முருகனாக எண்ணி, முருகன்போல் வேடம்பூண்டு முருக னுக்குரிய ஊர்தியும் கொடியும் உடையனாய் அம்மகளி ரோடு கூடியாடுகின்றான். இவ்வாடலே முருகன் வழி பாடாகும். இறைவன் கலப்பால் உலகமாகின்றான் என்று கருதிச் செய்யும் அபேத வழிபாட்டிற்கு இவ்வேலன் ஆடல் சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பதை நன்குணர லாம். ‘உலகம்’ என்பது உயிர்களை யுணர்த்தும். அவ் வுயிர்களுள் வீடு பெறுதற்குரிய சிறப்பியல்பு மக்களுக்கே யுண்டு. அம்மக்களுள் குன்றில் வாழும் குறவன், இழிந் தவனாதல் கண்கூடு. அந்த இழிந்த குறப்பூசாரியாகிய

வேலன் ஆடலையே தன்னுடலாகவும் அவ்வேலனே தானுக வும் என்றருளுகின்முன் முருகன் என்று கருதிச் செய்யும் இவ்வழிபாடு, இறைவன், உலகமே யாம் நிலையை யுணர்ந்து செய்யும் வழிபாட்டிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாதல் காண்க.

13. பழமுதிர் சோலைமலை

இப்பகுதியில் முருகனை வழிபடுதற்குரிய பல விடங் களும் கூறப்படுகின்றன. குறமகள், முருகனை வழிபடு முறை சிறப்பாகக் கூறப்படுகின்றது. பழம் உதிர்கின்ற சோலை சூழ்ந்த மலைக்குரியன் முருகன் என்பதும் இங்குக் கூறப்படுகின்றது. ('பழமுதிர் சோலைமலை' என்பதும் ஒருதலமே என்று கொள்வாருமுளர்.) முருகனைக் கண்ட விடத்து எத்துமுறையும் வாழ்த்துமுறையும் அடியார்க் கிரங்கி அவன் அருள்செய்யு முறையும் இங்குதான் கூறப் படுகின்றன. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு வாவினன்குடி, திருவேரகம் என்னும் நான்கு தலங்களைக் கூறிப் பின் பொதுவகையில் குன்றுதோருடலையும் விளக் கிய புலவர், இங்ஙனம் வரையறைப் படாமல் அன்பர் வேண்டி வழிபடும் அழகிய இடங்களில் எல்லாம் முருகன் இருப்பான் என்பதை இப்பகுதியில் விளக்குகின்முர்.

சிறிய தினையரிசியை மலரொடு கலந்து பிரப்பரிசியாக வைத்து, (பிரப்பங் கூடையில் வைக்கும் மரபுபற்றி இப் பெயர் பெற்றது.) ஆட்டுக்கிடாயை அறுத்துக் கோழிக் கொடியுடனே முருகக் கடவுள் அவ்விடத்தே நிற்கும்படி நிறுத்தி ஊர்தொறும் மேற்கொண்ட சிறப்புப் பொருந்திய விழாவிலும் தங்குதற்குரியன். அங்ஙனம் விழவு செய்யா மல் தன்பால் அன்புடையவர்கள் துதிக்கப் பொருந்தியிருக் கும் இடத்திலும் தங்குதற்குரியவன். வேலன் அமைத்த வெறியாடு களத்திலும் காட்டிலும் சோலையிலும், அழகு பொருந்திய ஆற்றிடைக் குறையிலும், ஆற்றங்கரைகளிலும் குளக்கரைகளிலும் இவற்றின் வேறுபட்ட பலவிடங்களி லும், நாற்சந்தியிலும் முச்சந்தியிலும், புதிய பூக்களையுடைய கடம்ப மரத்திலும், ஊர்க்குப் பொதுவாய்ப் பலரும் தங்கும் மரத்தடியில் அம்பலத்திலும் கந்து நட்டுள்ள இடத்திலும் (அந்து, அக்காலத்து வழிபாட்டிற்குரியதாயிருந்த நடுதறி) தங்குதற்குரியவனே என்று கூறுகின்முர்புலவர். (தொடரும்)

முருகன் நுண்மாண்

இறைவன் உருவம், பெயர், தொழில் ஒன்றும் இன்றிப் பரவியவன். இந்நிலவுலகில் விரவிய உயிர்கட்கு வீடு தந்திடும் கருணையால், உலகைப் படைத்துக் காத்து அழித்து அருள் செய்யும் அவன் ஓர் இலக்கியம் (=லக்ஷியம்.) அவனிடத்துள்ளது ஓர் இலக்கணம் (=லக்ஷணம்.) இவ்விலக்கணம் பொது, சிறப்பு என இருவகைப்படும். இதை முறையே தடஸ்த லக்ஷணம், ஸ்வரூப லக்ஷணம் என்பர். அவனுக்கு அளவுபடாத உண்மை, அறிவு, இன்பம் (ஸத், சித், ஆநந்தம்) இருப்பது சிறப்பிலக்கணம். உருவம், பெயர், தொழில் ஏற்றல் பொது இலக்கணம். மேலும், உயிர்கட்கு போகம் தந்து, அதன் இழிவினை உணர்த்தி, அதனினும் மேம்பட்ட வீடுபேற்றில் விழைவு வரச் செய்து, அதற்குரிய சாதனம் தந்து ஒழுகவைத்து வீடு நல்க, அவன் உருவம் கொள்வான். அவன் உருவும், அருவும், உருவருவும் ஆனவன், மிக்க அருளால் மேனி கொண்டவன். இந்த உண்மைகளைக் கந்தபுராணம் கீழ்வருமாறு விளக்குகின்றது :—

உருவோடு தொழில் பெயர் ஒன்றும் இன்றியே
பரவிய நீஅவை பரித்து நிற்பது
விரவிய உயிர்க் கெலாம்வீடு தந்திடும்
கருணையதே அலாற் கருமம் யாவதே.

—உற்பத்தி காண்டம், திருஅவதாரப் படலம் - 34

தன்னை நேரிலாப் பரம்பொருள் தனியுருக்கொண்ட
தென்ன காரணம்என்றி யேல்ஐந் தொழில் இயற்றி
முன்னைஆருயிர்ப் பாசங்கள் முழுவது மகற்றிப்
பின்னைவீடு பேறருளுவான் நினைந்த பேரருளே.

—மகே - சூரன் அமை - 119

ஞானந்தான் உருவாகிய நாயகன் இயல்பை
யானுநீயுமாய் இசைத்தும் என்றாலஃ தெளிதோ
மோனந்தீர் கலாமுனிவரும் தேற்றிலர் முழுதும்
தானும் காண்கிலன் இன்னமும் தன்பெருந் தலைமை.

—மகே - சூரன் அமை - 128

கரும காரணத்தால் தோன்றிய நமது உடல், இரதம் (=மச்சை), உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம் ஆகிய எழுவகைத் தாதுக்களை உடையது. உயிர்களைக் காக்கக் கருதி, அருள் காரணத்தால் தோன்றிய அவன் திருவடிவம், மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை ஆகிய ஆறு அத்துவாக்கள் (=வழிகள்) எனும் பகுதிகளின் தொகுப்பாகும்.

" மந்திரமே சோரியாவான் பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்
ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்களே சத்த தாதுவா—வைத்த
கலையே அவயமாக் காட்டும் அத்துவாவின்
நிலையே வடிவமாய் நின்றோய்."

—கந்தர் கலிவெண்பா

அவன் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளாய்த் தோன்றுவான், கருதுவார் கருதும் உருவினன். " பெம்மான் முருகன் பிறவான் இறவான் " என்பர் அருணகிரிநாதர்.

இறைவன் பல காலத்தில், பல இடங்களில், பல அன்பர்கட்குப் பலவகைப் பேறுகளை அளிப்பதற்கென்றே கொண்ட திருவுருவங்களுள் முருகன் திருவுருவும் ஒன்று. ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன். தனக்குத்தானே மகனாகிய தத்துவன். அவன் பரனோடு பேதகமல்லன். மாற்றம் மனம் கழிய எங்கும் நீக்கமற நின்று, எல்லாவற்றையும் தன் அகத்தே தாங்குவதால் பிரமம் எனப்படுகிறான். இந்த நிலை யோகிகட்குப் புருவமத்தியில் ஆயிரம் இதழ்களையுடைய தாமரைமேல் தேவ அங்குஷ்ட ப்ரமாணத்தில் சோதியாகக் காட்சியளிக்கும். அந்த சோதியே இவ்வுலகம் உய்ய விசித்திர உருக்கொண்டு குழந்தை வடிவில் வரும்.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள்ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகம் உய்ய

—உற்பத் - திருஅவ - 22

இந்த நுண்பொருளை உறுதிப்படுத்த முருகன் திரு அவதாரம் இலக்கியமாயிற்று. மனவாசகம் கடந்தவன் பரசிவத்தின் புருவமத்தியில் அழற்கண்ணினின்றும் சோதியாகத் தோன்றி, நிலம் நீர் தீ வளி வான் ஆகிய ஐம்பொருள் உறவு கொண்டு, சரவணப் பொய்கையில், தாமரை மலர்மேல் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் கொண்டு முருகனாகத் திருஅவதாரம் செய்தான் என்பது புராண வரலாறு.

> "மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
> நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
> அறுமுக உருவாய்த்தோன்றி அருளொடு சரவணத்தின்
> வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந்தருளினானே."
>
> —உற்பத் - திருஅவ - 96

உருவம் வந்த பிறகு பெயர், தொழில் முதலியன பற்றிய விவரங்களைக் காணலாம்.

பெயர் :—"மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள்" என்பது கந்தரலங்காரம். முருகனுடைய திருநாமங்கள் பல. அவற்றுள் சில கீழ்வருமாறு :—முருகன் = தெய்வத்தன்மை உடையவன், என்றும் இளமை அழகு முதலியன உடையவன் ; கந்தன் = சேர்க்கப்பட்டவன், சத்ருக்களை அழிப்பவன்; வேள்=விரும்பப்படுபவன், தலைவன்; சாமி = எல்லாம் உடையவன், உலகம் உயிர்கள் எல்லாவற்றையும் தனது உடைமைப் பொருளாகக் கொண்டவன் ; குகன் = காப்பவன், இருதய குகையில் இரகசியமாக அருள்பவன் ; கார்த்திகேயன் =கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றவன் ; சரவணபவன் = கங்கைக் கரையிலுள்ள தருப்பை வனத்தில் உருவுடன் காட்சியளித்தவன் ; கடம்பன்=கடப்ப மலர்மாலை தரித்தவன் ; விசாகன் = விசாக நாளிற் பிறந்தவன் ; காங்கேயன்=கங்கையில் தோன்றியவன் ; குமரன்=என்றும் இளமையுடைய குமரத்தன்மையுடையவன், தாழ்ந்த குறிக்கோள்களை அழிப்பவன் ; இவ்வாறே அவனுடைய ஆயிர நாமங்கட்கும் காரணங்கள் உள்ளன. இவற்றிற்கு ஆதாரமாக ஸ்கந்தபுராணச் செய்யுள்கள் பற்பல உள.

வடமொழி மறையின் முடிவில் "சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம்" என்று மும்முறை

ஓதப்பெறுதல் காண்க. இதன் விளக்கத்தைக் காஞ்சிப் புராணம்,

" எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும்......சுப்பிர
மணியன் ஓம்எனவும் முக்காற் கூறும் "

என விவரிக்கும்.

நாமம் பலவிருப்பினும் சிறப்பாக முருகனென நந் தண்டமிழிலும் ஸ்கந்தனென வடமொழியிலும் வழங்கும். முருகனிலுள்ள முருகு ஒரு பெயர்ச்சொல் பண்புப் பெயர், அது அன்விகுதிப் புணர்ந்து முருகையுடையவன் முருகனென ஆயிற்று.

அன்றும் இன்றும் இனியும் கடவுளுக்குக் காணப்படும் இலக்கணங்களைக் குறிக்கும் பண்புப் பெயரே முருகு ஆகும். இறை இலக்கணம் அனைத்தையும் அமையப் பெற்றவன் என்ற பொருளில் முருகன் என்னும் சொல் நிற்கிறது.

" விரிகடல் வியன் தானை யொடு
முருகு உறழப் பகைத்தலைச் சென்று "

—மதுரைக்காஞ்சி - 180

இதற்கு உரை வகுத்த புலவர் நச்சும் நச்சினார்க்கினியர் "முருகு உறழப் பகைதலை சென்று-முருகன் பகைவர் மேற் செல்லுமாறு போலத் தடையறப் பகைவரிடத்தே சென்று, முருகு-தெய்வத்தன்மை; ஆகுபெயராய் நின்றது" என்றனர். றும் நிகண்டு, முருகு, இளமை, நாற்றம், முருகவேள், விழா வனப்பாம் எனக் கூறுகிறது. இயற்கை மணமும், மாறு இளமையும், கடவுட்டன்மையும், அழியா அழகும், அறிவிற் சிறந்த எச்சமயத்தவருங் கொள்ளும் ஆண்டவனுக்குரிய இயல்புகளாம். இவ்வியல்புகள் அமைந்த ஒன்றைத் தமிழ் மக்கள் முருகன் என்று வழுத்துகிறார்கள். இவற்றான் முருகன் சமஷ்டி (எல்லாம் சேர்ந்த Eclectic) தெய்வமென்பது தெளிவு. (வியஷ்டி தனித்தனி பிரிந்தது) இதன் விரிவு பின் பகுதியில் விளங்கும். இனித் தொழில் உருவத்தினின்று தெளிதலின் செவ்வேள் சிறப்பை ஸ்கந்த புராணத்தில் நின்று காண்பாம்.

" முருகாவென உனையோதுந் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வமடைவார் வியாதி யடைந்து நையார்

ஒருகால முந்துன்ப மெய்தார் பாகதி யுற்றிடுவார்
பொருகாலனுடு புகார் சமராபுரிப் புண்ணியனே."

"தேறுமுக மின்றித் திரிந்தேமை யாளவன்றே
ஆறுமுகம் கொண்டே யவதரித்தான் எம்பெருமான்."

இறைவன் உருவம் நால்வகைத்து. அவை அங்கம் பிரத்தியங்கம் சாங்கம் உபாங்க மென்பன.

அங்கம் - சிரசு, முகம், இருதயம் 3. பிரத்தியங்கம் - மார்பு, கழுத்து, மூலை, தோள், கொப்பூழ், மறைவிடம், வயிறு, கண், மூக்கு, செவி, கை, தாள், விரல், தொடை, முழந்தாள், கணைக்கால் 16.

சாங்கம் :—(குணரூபமென்பது, அங்கத்துடன் கூடிய வகுப்புகள்).

குணத்திரயம் - திரிசூலம். சத்தியம் - பரசு. பிரதாபம் - வாள். துரகபேத்தியம் - வச்சிரம். அனுக்கிரகம் - அபயம். ருத்தியாதி சுத்தமாயை - நரகம். அதோமாயை - பாசம். விவர்ணம் - அங்குசம். சத்தநாதம் - மணி. பாசசங்காரம் - அக்கினி. (10)

உபாங்கம் :—(அவனைவிட்டு நீங்காமற் சமீபத்திலிருப்பது) கலை, புரிநூல், மாலை, கந்தம், நகை, இருக்கை, ஆவரணம். (7) இதன் விரிவை வாதுளம், "அங்க, பிரத்யங்க, ஸாங்கஞ்ச, உபாங்கஞ்ச" என்று ஆரம்பிக்கும் அடிகளில் காண்க. மற்றும் இப்பகுதியை சிவஞானசித்தியார் சுபக்கம் அறுவர் உரை 47-வது பாட்டில் பார்க்க.

சிவபெருமானுக்கு மகேச்சுர மூர்த்தங்கள் இருபத்தைந்து கூறப்படுதல்போல, முருகக் கடவுளுக்கும், ஞானசத்திதரர், கந்தர், தேவசேநாபதி, சுப்பிரமணியர், கஜாரூடர், சரவணபவர், கார்த்திகேயர், குமாரர், சண்முகர், தாரகாந்தகர், சேநாபதி, பிரமசாத்தர், கல்யாணர், பாலசுப்பிரமணியர், கிரௌஞ்சத்துவஞ்சர், மயூரவாகனரெனப் பதினாறு மூர்த்தங்கள் குமார தந்திரம் கூறுகிறது :

அகத்தின் அழகு முகத்தில் தெரிதலின், அங்கத்தில் தலைசிறந்தது முகம். அம்முகங்களின் நுண்மாண்பு சில வருமாறு :

(1) உலகில் வேதத்தால் கூறும் வைதிக சமயம் ஆறு. அவை கடவுளை ஓங்காரவடிவினராக வழிபடும் காணபத்தி

யம் (கணபதி) பேரின்ப வடிவினனைக வழிபடும் கௌமாரம் (குமரன்) பேரொளி வடிவினனைக வழிபடும் சௌரம் (சூரியன்). எங்கும் நிறைந்தவனைக வழிபடும் வைணவம் (விஷ்ணு). தாயாக வழிபடும் சாக்தேயம் (சக்தி). தந்தையாக வழிபடும் சைவம் (சிவன்). இவ்வைதிக சமயத்தின் ஆறு தெய்வத்தின் கூட்டே முருகனது ஆறுமுகம்.

ஆறுசமயக் கடவுள்வேறு வேறின்றி யான்
ஒருவனே அங்கங்கிருந்து
அன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும்
அறிவித்த வதன மணியே.

—போரூர் பிள்ளைத்தமிழ் சிறுபறை 3

ஆறு திசையுஞ் சமயங்களாறு மவுணர்களைக்
கீறும் வைவேற் பெருமான் முகமாறுங் கிளத்தும் - (9)
எல்லாக் கடவுளுமோர் வடிவாகி யிருந்தே செவ்வேள் (98)

—ஆறெழுத்தலங்காரம்

ஆறுசமய முந்தன்முக மாமென் றறியு மன்பர்
வீறு சிந்தைக்கிடை வீற்றிருக்குங் குகன் (98)

—மயிலலங்காரம்

ஆகையால் முருகன் வழிபாட்டால் ஆறு தெய்வ வழிபாட்டின் பயனைப் பெறலாம்.

(2) எழுதாமறை நான்கு. அவற்றில் கையாளப் படுவது: இருக்கு, எசுர், சாமம். இவற்றின் இடையிலுள்ள எசுருக்கு 101 சாகைகள். அவற்றின் நடுவினது 51-வதாகிய போதாயன சாகை. இது எழு காண்டமாக வகுக்கப்பட்டது. இதன் மத்தியிலுள்ளது நாலாவதாகிய சதருத்திரிய காண்டம். இதன் நடுவிலிருக்கிற 5-வது பிரசனத்தின் இதயத்திலிருப்பது நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து. இதனை "மும்மறையின் நடுமறையில் முனிவிலெழு காண்டத்தில்" என்ற சித்தாந்த சிகாமணி செய்யுளில் காண்க. முதன்மறையாகிய இருக்கின் முதல் பதம் அக்கினி. நடுமறையாகிய எசுரின் நடுச்சொல் சமுத்திரம். கடை மறையாகிய சாமத்தின் கடைக்கிளவி வாயு. முதல் வேதத்தின் முதலெழுத்தாகிய அகாரமும் நடுவேதத்தின் நடுவெழுத்தாகிய உகாரமும் கடைவேதத்தின் கடையெழுத்தாகிய மகாரமும் சேர்ந்து ஓம் ஆயிற்று. அ+உ+ம்=ஓம். பாதம்+உதகம்=பாதோ

தகம் என்பதுபோல அ+உ=ஓ. ஓ+ம்=ஓம் இதி சமஷ்டிப் பிரணவம். அ, உ—ம் வியஷ்டி பிரணவம். ஐந்தெழுத்தும் பிரணவம் ஒன்றும் கூடிய ஆறும், முருகனுக்கு முகமாயிற்று. இதனை,

முகத்தி லொன்றதா வவ்வெழுத் துடையதோர் முருகன்
நகைத்து முன்னெழுத் தினுக்கு உரைபொருள் என நவில
மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித்
திகைத் திருந்தனன் கண்டிலன் அப்பொருள் திறனே

—உற்ப. அயனைச்சிறை 10

நன்முக மிருமூன் றுண்டால் நமக்கவை தாமேகந்தன்
றன்முக மாகியுள்ள தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற கந்த மூவிரண்டெழுத்து மொன்ற
யுன்மக னுமத் தோரா றெழுத்தென வுள்ளவன்றே.

ஆதலின் நமதுசக்தி அறுமுகம் அவனும் யாமும்
பேதகமன்றல்நம் போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவிபோல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில்வீடும் போற்றினர்க்கு அருள வல்லான்.

—உற்ப. திருவிளை, 18, 19

(3) முருகன், இறைவனது கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மேல்கீழ்த் திசைகளை நிரலே நோக்கிய ஈசானம், தத்புருஷம், அகோரம், சத்தியோசாதம், வாமம், அதோமுகம் ஆகிய ஆறுமுடையவன்.

வந்திக்கு மலரோனாதி வானவர் உரைத்தல் கேளாப்
புந்திக்குள் இடர் செய்யற்க புதல்வனைத் தருதுமென்னா
அந்திக்கு நிகர்மெய் யண்ணல் அருள்புரிந் தறிஞராயோர்
சிந்திக்குந் தனதுதொல்லைத் திருமுக மாறுங் கொண்டான்.

—உற். அவ. 43

"ஐந்து முகத்தோடு அதோமுகமுந் தந்து
திருமுகங்கள் ஆறாகி"

எனக் கலிவெண்பா கூறுதல் காண்க.

(4) அதோ முகத்திற்குப் பதிலாக அம்பிகை அல்லது மாயனது முகத்தை முகம் ஆறு என்பர். இஃதே யன்றி

இறைவனது அனுதி மல முத்தத்துவம் முதலிய ஆறு குணங்களே முருகனது முகமாக வந்ததை,

ஏவர்தம் பாலுமின்றி எல்லைதீர் அமலந்தன்ன
மூவிரு குணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவணத் தண் பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளு மாற்றால் அறுமுகங் கொண்டா னன்றே.
—உற்ப. திருவவ. 94

இஃதேயன்றி முருகாற்றுப்படையும் கலிவெண்பாவும் இம்முகங்கள் பற்றிக் கூறுவது கவனிக்கற்பாலது. "கருணை கூர் முகங்களாறும்" உயிர்கட்குக் கருணை பொழிவதால் 'முகம்பொழி கருணை போற்றி' என்றதும் உன்னற்பாலது.

"பேறுதரும் தெய்வம் யாவைக்கும் யான் பெருந்தேவ னென்றே
வீறுமுகம் கொண்டுபோரூர் முருகன் விளக்கியதே."

கண் :—

"கருத்தே புகுந்து கதிகாட்டுங்
கண்ணே வருக !" —சந்நிதி முறை.

பிரத்தியங்கத்தில் தலைசிறந்தது கண். 'கண்ணென்ப வாழுமுயிர்க்கு' என்ற பொய்யாமொழியை ஓர்க. முருகனுக்கு ஒவ்வொரு முகத்திலும் கண்கள் மூன்றென்பர் சிலர்; இரண்டென்பர் பலர். மூன்றென்பது ஞாயிற்றுக்குக் காரணமாகிய ஞாயிற்றுக்கண், திங்கட்குக் காரணமாகிய திங்கட்கண், எரிக்குக் காரணமாகிய அழற்கண் என்பன. இம் மூன்று கண்களும் மூன்று இதழ்களோடு கூடிய வில்வம் போன்றும், நாசி அதன் காம்பு போன்றும் உள்ளன. இவற்றுள் அமயம் நேர்ந்துழி திறப்பது அழற்கண். பலரும் ஏற்கும் ஏனைய இரண்டும் எக்காலத்தும் திறந்திருப்பன. கந்தனுக்குக் கண்கள் பதினெட்டென்பது புலவர் புராண ஆசிரியரான தண்டபாணி சுவாமிகள் நூற்களில் மலிந்துள்ளன. அவற்றில் சுவை,நயம் பயப்பவை சில வருமாறு:

"அட்ச மாறிரண்டுள்ளா யெனத்துதி செய்துஅழல்
விழி ஆறையும் மறைப்பார்
புட்சாபம் போற்பொலிவதால் அடியேன்
புழுங்குவ துணர்ந்தருள் புரிவாய்". —துருபரமாலை

(தொடரும்)